# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 274 | சனி, பெப்ரவரி 17, 2024 | 12 பக்கங்கள்


## அமெரிக்கா பறந்தது எதற்காக?



## மேற்குலகின் புதிய நகர்வுகள்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் *செவ்வி*

## எட்கா வரப்போகின்றதா?
## டில்லியின் அடுத்த நகர்வு

அகிலன்

## பாகிஸ்தானின் அரசியல் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக மாற்றியிருக்கும்
# தேர்தல் முடிவுகள்



தமிழில்: ஜெயந்திரன்

info@ilakku.org

© 2024 இலக்கு இணையம்

## குமாரபுரம் படுகொலை: 28ஆவது ஆண்டு நினைவுநாள்

1996ஆம் ஆண்டு, திருகோணமலை குமாரபுரத்தில் தமிழ் மக்கள் மீதான படுகொலை இடம்பெற்று கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன்(11) 28 ஆண்டுகளாகின்றன. வீடுகளுக்குள் புகுந்த இராணுவத்தினர் கண்மூடித் தனமாக அப்பாவி மக்களை சுட்டுக் கொன்றனர். உயிரிழந்தவர்களுக்காக ஈகைச் சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.



இதன்போது 26 (சிறுவர்கள், பெண்கள் உட்பட) பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த 20 வருடங்களாக இடம்பெற்றுவந்த நிலையில், 2016ஆம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினர் அனைவரும் அநுராதபுரம் மேல்நீதிமன்றத்தின் பெரும்பான்மை இன ஜூரிகள் கொண்ட சபையால் விடுதலை செய்யப் பட்டிருந்தனர்.

இத்தனைக்கும் படுகொலைக்கு உள்ளானவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை அடையாளம் காட்டியிருந்தனர். எனினும், அவர்களுக்கு நீதிகிடைக்கவில்லை.

## சமூக பிணக்குத் தீர்வுகளை வலுப்படுத்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை



இலங்கையில் சமூகப் பிரச்சினைகளில் ஏற்படும் பிணக்குகளை தீர்ப்பதற்கான தீர்வுகளை வலுப்படுத்தல் தொடர்பான இரு நாட்கள் கொண்ட பயிற்சிப் பட்டறை ஒன்று கிண்ணியா விசன் மண்டபத்தில் இடம் பெற்றது.

இதனை பயனுறுதிமிக்க வகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) எனும் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்ததுடன் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் பங்களிப்புடன் நிதிப் பங்களிப்பை பிரிட்டிஷ் கவுன்சில் வழங்கியிருந்தது. இரு நாட்கள்(13,14) கொண்ட குறித்த பயிற்சிப் பட்டறையில் மூதூர் ,தம்பலகாமம் பிரதேச செயலகங்களில் தெரிவு செய்யப்பட்ட துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என சுமார் 30 பேர்கள் கலந்து கொண்டனர்.

இதில் முரண்பாடுகளை தீர்ப்பதற்கான வழி முறைகள், முரண்பாட்டு வகைகள் மற்றும் அதனை எவ்வாறு பகுப்பாய்வு செய்வது, தீர்வினை வழங்குதல் உட்பட பல குழு கலந்துரையாடல்களுடன் திறம்பட பயிற்சியளிக்கப்பட்டது. சமூக மட்டத்தில் மாத்திரமல்ல தனி நபர், குழுக்கள் என பல்தரப்பட்ட வகையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இவ்வாறான நிலையில் தங்களது சமூக மட்ட அமைப்புக்கள்அரசதுறைஅலுவலகங்களில் ஏற்படும் பிணக்குகளுக்கு தீர்வு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## தேசிய மாநாட்டுக்கு தடை – சிக்கலில் தமிழரசுக் கட்சி

இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் கடந்த வியாழக் கிழமை(15) இடைக்கால தடை விதித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 27ஆம் திகதி வரை தேசிய மாநாட்டை நடத்த இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட உறுப்பினர் ஒருவர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் முன்னிலையாகியிருந்தார்.



இதேவேளை, தேசிய மாநாட்டுக்கு தடைகோரி யாழ்ப்பாண நீதிமன்றத்திலும் மனு வொன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு மீதான விசாரணை தற்போது நடந்து வருகிறது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு வாக்கெடுப்பின் ஊடாக நடைபெற்று முடிந்திருந்தது. அதற்குஅமைவாகசிறீதரன்தெரிவாகியிருந்தார். இதன் பின்னர் கட்சியின் ஏனைய நிர்வாகப் பதவிகளுக்கான தெரிவு தொடர்பான மத்திய குழு மற்றும் பொதுக் குழுக் கூட்டம் என்பன கடந்த மாதம் திருகோணமலையில் நடைபெற்றன.

பொதுச்செயலாளர்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு சீனா கடும் எதிர்ப்பு



ரஸ்யாவுடன் வர்த்தக தொடர்புகளை பேணிவரும் சீன மற்றும் இந்திய நிறுவனங்கள் மீது தடைகளை கொண்டு வரப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் இந்த வாரம் தெரிவித்துள்ள கருத்துக்கு சீனா தனது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இது ஒரு சட்டவிரோதமான தடை, ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை தொடர்பில் நாம் கவனம் செலுத்திவருகின்றோம். எமது நாட்டின் நிறுவனங்களை பாதுகாப்பதற்கு தேவையான எல்லா நடவடிக்கைகளையும் சீனா மேற் கொள்ளும் என சீனாவின் வெளிவிவகார அமைச்சகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சீனாவில் உள்ள 3 நிறுவனங்கள் மற்றும் இந்தியாவில்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## மீண்டும் கனடாவில் தாக்குதல் - இந்தியா மீது சந்தேகம்

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட சீக்கிய அமைப்பின் தலைவருக்கு நெருக்கமானவரின் வீட்டின் மீது துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றது தொடர்பில் கனடாவின் ஒன்றாரியோ மாநிலத்தின் காவல்துறையினர் விசாரணைகளை மேற் கொண்டுவருவதாக கனேடிய தகவல்கள் கடந்த திங்கட் கிழமை(12) தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் நியூயோர்க்கைத் தளமாகக்கொண்ட காலிஸ்தான் ஆதரவு அமைப்பின் தலைவரான குர்வத்சிங் பன்னும் என்பவர் மீது இந்தியா கொலை முயற்சியை மேற்கொண்டதாக



தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## மருத்துவத்துறை பரீட்சையில் சித்தியடைந்த செயற்கை நுண்ணறிவு

ரஸ்யாவில் வடிவமைக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு கணணி மருத்துவக்கல்லூரியில் ஆறுவருட கற்கைநெறியினை பூர்த்திசெய்யும் மாணவர்கள் எழுதும் பரீட்சையில் பங்குபற்றி சித்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



ரஸ்யாவின் சேர்பாங் எனப்படும் நிறுவனம் தயாரித்த கிகாசற் நியூட்றல் நெற்வேர்க் எனப்படும் செயற்கை நுண்ணறிவே 100 வினாக்கள் கொண்ட பரீட்சையில் 82 விகித மதிப்பெண்கள் பெற்று சித்தியடைந்துள்ளது என ரஸ்ய ஊடகம் கடந்த செவ்வாய்க் கிழமை(13) தெரிவித்துள்ளது.

சத்திரசிகிச்சை, மகப்பேற்றியல் மற்றும் பொதுமருத்துவம் ஆகிய துறைகள் தொடர்பில் ஏற்படும் அசாதாரணமான நிலமைகளைஎவ்வாறுகையாள்வதுஎன்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வாய்மொழிமூல பரீட்சையிலும் அது சித்தியடைந்துள்ளது.

நோய்க்கான தீர்வு, அதற்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## இஸ்ரேலுக்கு வழங்கப்பட்ட இந்திய தாக்குதல் விமானம்

காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் போரில் பயன்படுத்தவென இந்தியா தயாரித்து வழங்கிய ஆளில்லாத தாக்குதல் விமானத்தால் புதிய சர்ச்சைகள் தோன்றியுள்ளன.

ஹேமீஸ்-900 எனப்படும் இந்த தாக்குதல் விமானத்தை தயாரிக்கும் அதானி குழுமத்திற்கு சொந்தமான ஹைதராபாத்தை தளமாகக் கொண்ட நிறுவனம் அதனை இஸ்ரேலுக்கு வழங்கியுள்ளது என்பது இஸ்ரேல் மேற்கொள்ளும்



மனிதப்படுகொலைகளுக்கு மேலும் உதவும் செயல் என மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

மக்கள் செறிந்துவாழும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# பூகோள அரசியலில் சிக்கியுள்ள மக்கள் சக்தியும், தமிழரசுக் கட்சியும்

*இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடுகள் வரலாற்று ரீதியாக இருந்துவருகின்ற ஒரு பிரச்சனை. 1987களில் இலங்கை இந்திய உடன்பாட்டை அன்றைய இலங்கை அரச தலைவர் ஜே.ஆர் ஜெயவர்த்தனா எதிர்த்தால் அதனை சிறீமாவோ பண்டாரநாயக்காவை அரச தலைவராக்குவோம் என ஜே.என் டிக்சிற் மிரட்டும் அளவுக்கு இலங்கையின் அரசியலை இந்தியா கையாண்டு வந்திருந்தது.*

*தன்பின்னர் இலங்கை இந்திய உடன்பாடு தோல்வி கண்டதும், உலகில் பனிப்போர் முடிவக்கு வந்ததும் இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடுகளை குறைத்திருந்தாலும் அதன் பின்னர் மீண்டும் சீனாவின் வளர்ச்சி, ரஸ்யாவுக்கும் அமெரிக் காவுக்கும் இடையிலான பதற்றம் என்பன இந்தியாவை மீண்டும் இலங்கை விவகாரத்தில் தலையிட தூண்டியுள்ளது.*

*அமைதியாக இருந்த அமெரிக்காவும் 2007 ஆம் ஆண்டு அன்றைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயா ராஜபக்சாவுடன் நெருக்கத்தைப் பேணி தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் உதவி படைத்துறை உடன்பாடு ஒன்றை எட்டியது.*

*அதனைத் தொடர்ந்து இந்தியாவும் தமிழ் மக்கள் மீதான தனது செயற்பாடுகளை முன்நகர்த்தி இலங்கையை தனது கைக்குள் கொண்டுவருவதற்கு முயன்றது. மகிந்த ராஜபக்சாவை தனது கைக்குள் கொண்டுவந்து அமெரிக்காவின் உடன்பாட்டை முறியடிப்பதற்கு இந்தியா முயன்ற சமயம் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றை நிகழத்தி தனது உடன்பாட்டை மேலும் 10 வருடங்களுக்கு 2017 ஆம் ஆண்டு அமெரிக்கா புதுப்பித்துக் கொண்டது.*

*அதன் பின்னர் மிலேனியம் சலஞ் என்ற அடுத்த கட்டம் நோக்கி அமெரிக்கா நகரும்போது இந்தியா இலங்கையில் ஆட்சிமாற்றம் ஒன்றை கொண்டு வந்திருந்தது. ஆனால் அந்த ஆட்சி மாற்றம் 2022 ஆம் ஆண்டு மீண்டும் அமெரிக்காவினால் மாற்றப்பட்டது.*

*இப்போது மீண்டும் ஒரு தேர்தல் இலங்கையில் இடம்பெறவுள்ள நிலையில் இந்த இரு நாடுகளும் இலங்கையின் அரசியலை கையகப்படுத்த முற்பட்டு நிற்கின்றன. அரகலிய போராட்டத்தின் ஆரம்பத்தில் ஜே.வி.பி எனப்படும் பெலவத்தையில் இருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்திற்கு சென்று அதன் தலைவர் அனுரகுமர திஸநாயக்காவை சந்தித்த அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் ஜீலி சாங் கடந்த ஒக்டோபர் மாதமும் மீண்டும் அங்கு சென்றிருந்தார்.*

*அவரைத் தொடர்ந்து நவம்பர் மாதம் இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயும் அங்கு சென்றிருந்தார். அமெரிக்காவின் அசைவுகளை உன்னிப்பாக அவதானிக்கும் இந்தியா இலங்கை விடையத்தில் அமெரிக்காவை முறியடிப்ப தில் தீவிரமாகவே உள்ளது.*

*அதன் பின்னர் ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியில் அனைத்துலக நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் திஸநாயக்காவை சந்தித்திருந்தனர். அதன் பின்னர் உடனடியாகவே இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் சந்தோஸ் ஜா திஸாநாயக்காவை சந்தித்திருந்தார். அவர் சந்தித்த சில நாட்களில் ஜேர்மனின் தூதுவர் தேசிய மக்கள் சக்தியின் தலைவரை சந்தித்திருந்தார்.*

*அதன் பின்னர் இந்தியாவுக்கு அழைக்கப்பட்ட திஸநாயக்காவை இந்திய வெளிவிவகார அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் சந்தித்தது நிலைமையின் தீவிரத்தை உணர்த்துவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.*

*இலங்கையின் அரச தலைவர் தேர்தலில் மட்டுமல்ல இலங்கை நாடாளுமன்ற தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி பலமான சக்தியாக விளங்கும் என்ற எதிர்பார்ப்பு அனைத்துலக மட்டத்தில் எழுந்துள்ளதையே இது காட்டுகின்றது.*

*ஆனால் இலங்கை அரசை தம்வசப்படுத்த போட்டிபோடும் இரு தரப்பில் ஒரு தரப்பே வெற்றி கொள்ள முடியும். அவ்வாறு ஏற்பட்டால் மறுதரப்பின்*

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# இந்தோ சிறிலங்கா தேசியவாதமும் ஈழத்தமிழர் இறைமையும்

பிரித்தானிய காலனித்துவ அரசு சந்தை இராணுவத் தேவைகளுக்காக 1833ம் ஆண்டு கோல்புறூக் கமரோன் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் "சிலோன்" என்ற ஒற்றையாட்சி அரசில் "சிலனிஸ்" என்ற பொதுத் தேசியத்துள் தமிழ்த் தேசியத்தையும் சிங்களத் தேசியத்தையும் செயற்கையாக இணைத்து 115 ஆண்டுகள் தாங்கள் ஆண்டு காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக 04.02.1948 இல் தங்களால் உருவாக்கப்பட்ட அந்தச் செயற்கையான "சிலோன்" அரசுக்கு சுதந்திரம் வழங்கியமையே இலங்கைத் தமிழர்களின் தேசியப் பிரச்சினையின் மூலமாக இன்றும் உள்ளது. இதனாலேயே பலஸ்தீனிய மக்கள் தேசியப் பிரச்சினை போன்றே ஈழத்தமிழர் தேசியப் பிரச்சனையும் காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக உலக நாடுகளாலும் ஐக்கிய நாடுகளாலும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையாக உள்ளது. ஆனால் ஐக்கிய நாடுகள் சபை ஏற்புடைய தீர்வை நடைமுறைப்படுத்த இயலாமைக்குக் காரணம் இந்தியா. இந்தியா, தான் 1987 இல் இந்திய சிறிலங்கா உடன்படிக்கையின்படி தமிழர்களுடைய கண்ணியமான வாழ்வை 13வது திருத்தத்தின் மூலம் உருவாக்குவதாக ஐக்கிய நாடுகள் சபையில் வாக்களித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலையீட்டைத் தடுத்தது. ஆனால் 13 வது திருத்தத்தின் வடக்கு கிழக்கு ஒரு நிர்வாக அலகு என்ற மிகச்சிறிய நிர்வாக இணைப்புக் கூட இன்று இந்தியா அழைத்துப் பேசும் ஜே. வி. பியால் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் நீக்கப்பட்டு விட்டது. இவ்வாரம் சிறிலங்காவின் பிவிதுருஹெல உறுமயக் கட்சியின் தலைவரும் சிறிலங்காவின் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில 13 வது திருத்தம் மாகாணசபை சமுகப் பொலிஸ் அதிகாரத்தை வழங்குகிறதென அதனை நீக்குமாறு சிறிலங்காப் பாராளுமன்றத்தில் 22வது அரசியலமைப்புத் திருத்தத்தை தனியாள் மசோதாவாக கொண்டு வர வர்த்தமானிப்படுத்தியுள்ளார். இந்நிலையில் சிங்கள அரசியல்வாதிகள் 13வது திருத்தம் ஈழத்தமிழர்களுக்கான தொடக்கமாக எந்த வகையிலும் அமைய அனுமதிக்க மாட்டார்கள் என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சர் மாண்பமை சுப்பரமணியம் ஜெயசங்கர் அவர்களுக்கும் ஈழத்தமிழ் அரசியல்வாதிகளுக்கும் இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

உண்மையில் இந்திய சிறிலங்கா ஒப்பந்தம் 1987 இல் கைச்சாத்தானதின் வழி இலங்கைத் தீவின் அரசியலில் 'இந்தோ சிறிலங்கா தேசியவாதம்' சட்டநிலையில் தோன்றியது. இது இந்தியாவின் பிராந்தியத்துக்கான பரந்துபட்ட பாதுகாப்பு என்ற மையப்பொருளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அயல்நாட்டினர்க்கான முன்னுரிமை என்ற செயல்முறையுடன் கூடிய இந்தியாவின் ஆட்சியாளர்களுக்கும் சிறிலங்காவின் ஆட்சியாளர்களுக்கும் இடையில் இருநாடுகளின் இறைமையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் தலைமை நோக்குடையது. பொருளாதாரத்தைக் கூட்டாக வளர்த்தல், பௌத்தத்தை மேம்படுத்தி இந்தோ சிறிலங்காப் பண்பாட்டு வளர்ச்சிக்கான உறவுப்பலாமாக அதனை முன்னெடுத்தல் என்னும் பொதுமைகளின் அடிப்படையில் உருவான தேசியவாதம். இந்தத் தேசியவாதம் இந்தியா சிறிலங்கா மக்களின் நலன்கள் சார்பாக முக்கியத்துவப்படுத்தப்படாது ஆட்சியாளர்களிடையான அயல்நாட்டினர் என்ற உறவுப் போக்குக்கு முன்னுரிமை அளித்து சிறிலங்காவின் பாதுகாப்புக்கோ பொருளாதாரத்துக்கோ அபாயங்கள் ஏற்படுகின்ற நேரத்தில் முதலில் சிறிலங்கா உதவி கோரும் அயல் அரசாக இந்தியா தன்னை முன்னிலைப்படுத்துகிறது. அப்படி தான் உதவ இயலாதென்றாலே சிறிலங்கா வேறு நாடுகளை அணுகலாம். இது பிராந்திய மேலாண்மையை நாகரிகமான முறையில் சிறிலங்காவின் மேல் நிறுவிய செயற்பாடு. இந்த உடன்படிக்கையில் தமிழர் வரலாற்றுத் தாயகம் தமிழர்களின் தேசியம் தன்னாட்சி உரிமையின் அடிப்படையிலான அரசியல் தீர்வுகள் எதுவும் பேசப்படவில்லை. ஜே. ஆரின் மாவட்டசபைக்குப் பதிலாக வடக்கு கிழக்கு இணைந்த ஒரு நிர்வாக அலகான மாகாணசபையை முன்மொழிந்தது. இது சிறிலங்காவின் நிதிப்பரவலாக்கலில் வடக்கு கிழக்கின் வளர்ச்சிக்கான பொதுத்திட்டமிடலுக்கு உதவும் நோக்கானது. இந்த ஒரலகு என்பது ஜே. வி. பி யின் நீதிமன்ற வழக்கால் நீக்கப்பட்டுவிட்டது. மேலும் இன்று இந்தியப் பொருளாதாரத்தின் தலைமையில் சிறிலங்காவின் பொருளாதாரம் கூட்டொருங்கு முறையில் வளர்க்கப்பட வேண்டும் என்ற புதிய உலக அரசியல் ஒழுங்குமுறையின் தேவைக்கு ஏற்ப எல்லாவிதமான இணைப்புக்களும் கொண்ட பொருளாதாரமாக இந்தோ சிறிலங்காப் பொருளாதாரம் மாற்றம் கண்டுள்ளது.

இந்தியா எதுவித எதிர்பார்ப்புமில்லாமல் மிகப்பெருந்தொகையான நிதியை சிறிலங்காவுக்குத் தனது நாட்டுக்கு வழங்குவது போலவே வழங்கியும் புலனாய்வு சிவில் நிர்வாகம் என்பவற்றில் இணைந்தும் இறைமைப்பகிர்வை உறுதி செய்து இந்தியாவின் யூனியன் பிரதேசம் போலவே சிறிலங்கா மாறிவிட்டதைத் தெளிவாக்குகிறது. இது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இனம்சார்ந்த நிலையில் பரிணாமம் அடைந்து வரும் தமிழகத் தமிழர்கள் ஈழத்தமிழர்கள் என்ற இனஉறவுத் தமிழ்த்தேசியவாதத்திற்கு எதிரான தொப்புள்கொடி அறுப்பு முயற்சியாகவும் உள்ளது. இந்தோ சிறிலங்கா தேசியவாதம் ஈழத்தமிழரிடையிலேயே இலங்கையில் அவர்கள் ஒருமதம் சார் பண்பாட்டை ஏற்கும் அளவுக்கு மதவெறியாகவும் மாறி வருகிறது. சிங்களவர்களும் தங்களுடைய சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு இந்தோ சிறிலங்கா தேசியவாதம் பேரெழுச்சி தரும் ஒன்றாக உள்ளதால் ஏற்று வருகின்றனர். இதுவே ஜே.வி.பி யினரின் அநுரகுமார திசாநாயக்கா தலைமையிலான குழுவுக்கான இந்திய உயர்மட்டச் சந்திப்புக்கான அழைப்பு என்பதை அங்கு சென்று வந்ததின் பின்னர் ஜே. வி. பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித கெரத் டெய்லி மிரர்க்கு வழங்கிய செவ்வியில் தெளிவாகக் காணலாம். "பிராந்தியப் பாதுகாப்புக்கு நாங்கள் இந்தியாவுடன் ஒத்துழைக்கத் தயார்." இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையின் பாதுகாப்பு - இலங்கையின் பாதுகாப்பு இந்தியாவின் பாதுகாப்பு. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மோதலை எங்களுக்கானதாக மாற்ற மாட்டோம். நுரைச்சேலை மின்நிலையத் திட்டம் சீனாவுக்கு, சம்பூர் இந்தியாவுக்கு என ஒருநாட்டின் நலனுக்காக மற்றைய நாட்டின் நலனை நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம். நாம் இந்தியா சென்றது இரண்டு நாடுகளாக நாங்கள் நெருக்கமாக எப்படி இணைந்து பணியாற்றுவது என்பதைக் கற்றுக்கொள்ள உதவியுள்ளது என்ற விஜித கெரத்தின் வார்த்தைகள் அநுரதிசநாயக்காவுக்கே இந்திய அமெரிக்க ஆதரவுநிலை அரசுத்தலைவர் தேர்தலில் உறுதியென்பதையும் தெளிவாக்குகிறது.

இந்நிலையில் அதிகாரம் இல்லாத கட்சிக் கதிரைக்குத் தேர்தல்களும் நீதிமன்ற இடைக்காலத் தடை உத்தரவுகளும் பெற்று ஏதோவொரு உலகத்தில் தமிழரசுக்கட்சி உள்ளமை வேதனை பயக்குகிறது. இதுதான் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் நிலையா எனச் சோராதவாறு ஈழத்தமிழர் இறைமை மீட்புக்கு மூன்று தூண்களை பலஸ்தீனிய விடுதலைப் போராட்டம் காட்சிப்படுத்துகிறது. 01. படைவழி ஆக்கிரமிப்பு மூலம் நிலத்தை ஆக்கிரமித்து அதனைத் தங்கள் தேசமாக மாற்ற முடியாது ( ஐக்கிய நாடுகள் பாதுகாப்பச் சபையின் 242 தீர்மானம் ) 02. தங்கள் சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு உலக ஆதரவைத் தேட முடியாது 03. ஆக்கிரமிப்பைச் செய்யும் ஆட்சியாளர்கள் தங்கள் சொந்த மக்களாலேயே நிராகரிக்கப்படுவர். இஸ்ரேயலின் பலஸ்தீனிய மக்கள் மேலான போர் ஆய்வின் இந்த மூன்று ஆய்வு வெளிப்பாடுகளும் ஈழத்தமிழர்களுக்கு தங்கள் தாயகம் படைபல ஆக்கிரமிப்புள் இருப்பதையும், சிறிலங்கா சட்டவிரோதமான தனது ஆட்சிக்கு உலக ஆதரவை பெற இயலாது என்பதையும் இன்று சிறிலங்கா 91 பில்லியன் டொலரில் மீள முடியாத துன்பத்துள் நாட்டின் எல்லா மக்களையும் ஆழ்த்தியுள்ளது. ஈழத்தமிழர் மேலான இனவெறி மதவெறித் தனமான போரினாலும் அதன் விளைவுகளாலும் என்பதால் அதனை எல்லா மக்களும் நிராகரிக்கும் காலம் நெருங்கி விட்டது என்பதையும், மனதிருத்தி, இந்த மூன்று தூண்களின் வழியிலும் ஈழத்தமிழர்கள் நிலையை உலகுக்கு எடுத்துரைத்து விரைவில் ஈழத்தமிழர்க்கான தளைகளிலிருந்து விடுபடும் ஆற்றலை வளர்க்கலாம் என்பதே இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# எட்கா வரப்போகின்றதா? டில்லியின் அடுத்த நகர்வு

அகிலன்

எட்கா உடன்படிக்கையை எதிர்ப்பின்றி நிறைவேற்றும் வகையில் இந்தியா, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் அநுரகுமார திஸநாயக்கவை அழைத்து பேசியிருப்பதாக தகவல்கள் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் வெளியாகியுள்ளன. ஆனால், இது தொடர்பில் ஜே.வி.பி. வாய் திறக்கவில்லை. சிங்கள தேசியவாத அமைப்புக்கள் ஏற்கனவே எச்சரிக்கை மணிகளை அடிக்கத் தொடங்கியுள்ளன.




இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வர்த்தக தொழிநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையினை *The Economic and Technology Co-operation Agreement (ETCA)* மீள ஆரம்பிக்கும் வகையில் இதுவரை 12 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இதனை அடுத்த மாதத்தில் இறுதி செய்வதற்கு இந்தியா எதிர்பார்ப்பதாக இராஜதந்திர தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த உடன்படிக்கையினை கொண்டு வதற்கு, ஜே.விபி. தொடர்ந்தும் எதிர்ப்பினை வெளியிட்டு வந்தது. இந்த நிலையில் ஜே.வி.பி.யை தமது பக்கம் ஈர்க்கும் வகையில் இந்தியா, அதன் தலைவரை அழைத்து பேச்சுக்களில் ஈடு பட்டதுடன் சலுகைகளையும் வழங்க முன்வந்துள்ளதாக தென்னிலங்கை அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு குறித்த உடன்படிக்கை சாதகமாக அமையும் என இலங்கை அரசாங்கம் நம்புகிறது. கடந்த ஜீலை மாதம் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த இணக்கம் தெரிவித்திருந்தர்.

## மார்ச் மாதம் இறுதி முடிவு?

இது குறித்த பேச்சுவார்த்தைகளை மார்ச் மாதத்திற்குள் முடிவுக்கு கொண்டுவர இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. இதனையடுத்து சிங்கள தேசியவாத அமைப்புக்கள் இதற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து போராட்டங்களுக்கும் தயாராகியுள்ளன.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், சீனாவுடன் இலங்கையில் அதிகாரத்தில் இருந்த ராஜபக்ஷ அரசாங்கம் நெருக்கமான உறவை பேணியதுடன், இந்தியாவுடனான உறவுகளிலும் முறுகல்களை ஏற்படுத்திக்கொண்டனர். ராஜபக்ஷக்களின் காலத்தில் இந்திய இலங்கை உறவுகளில் ஆரோக்கியமான ஒரு நிலை இருக்கவில்லை.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர் இந்தியாவுடன் இலங்கை மீண்டும் நெருக்கமான உறவை கட்டியெழுப்பியதுடன், இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை விரிவுப்படுத்த இந்த பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

எட்கா ஒப்பந்தத்துக்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலுவான ஆதரவையும் வழங்கினார். ஆனால், போராட்டங்கள் தீவிரமாக வெடித்தமையால் இது குறித்த பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதிப் பதவிக்கு வந்த பின்னர் மீண்டும் எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான பேச்சுவார்த்தைகளை இலங்கை ஆரம்பித்தது. ரணில் விக்ரமசிங்கவின் இந்திய பயணத்தின் போது இதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டிருந்தன.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் இதனைக் கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

## உடன்படிக்கையின் உள்ளடக்கம்

இரு நாடுகளுக்கும் இடையில் பொருட்களை மட்டுமன்றி சேவைகளை ஏற்றுமதி - இறக்குமதி செய்வது என்பது இதன் பிரதான அம்சம். அதாவது, சேவை வழங்குனர்களைப் பரிமாறிக்கொள்வது. இந்தியாவிலிருந்து மருத்துவர்கள் இங்கு வருவது - இங்கிருந்து மருத்துவர்கள் இந்தியாவுக்குச் செல்வது போன்றன இதில் உள்ளடங்கும். அதேபோல, அங்கிருக்கக்கூடிய பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், போராசிரியர்கள் இங்கு வந்து தமது சேவைகளை வழங்குவது, இங்குள்ள விரிவுரையாளர்கள்-பேராசிரியர்கள்அங்கு சென்று சேவைகளை வழங்குவது என்பனதான் இதன் முக்கிய அம்சங்கள்.

அதாவது, இரு நாடுகளிலும் உள்ள சேவைகளைவழங்குபவர்கள்மற்றைய நாட்டுக்குச்சென்று தமது சேவைகளை வழங்குவது என்பதுதான் இதன் உள்ளடக்கத்தில் பிரதானமானது. இப்போது இதற்கான உடன்படிக்கை ஒன்று இல்லாமையால், இந்தியாவில் இருக்கும் பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்றவர்கள் இங்கு வந்து இலகுவாகச் சேவைகளை வழங்க முடியாது. ஆனால், இதற்கான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டால், அதற்குத் தடை இருக்காது என்று இதன் உள்ளடக்கம் தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் விளக்கினார்.

இதனால், இந்தியாவுக்குத்தான் அதிக நன்மைகள் உள்ளது. இந்திய வைத்தியவர்கள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள் இங்கு வரலாம். இலங்கை மருத்துவர்கள் இதனை எதிர்க்கின்றார்கள். இந்திய மருத்துவர்கள் குறைவான கட்டணத்தில் தமது சேவைகளை இலங்கையில் வழங்குவதற்கு முன்வந்தால், தனியார் துறையில் பணியாற்றும் மருத்துவர்கள் தமது வருமானம் பாதிக்கப்படும் என்று அஞ்சுகின்றார்கள்.

## சிங்கள தேசியவாதிகள் எதிர்ப்பு

ஜே.வி.பி. கடந்த காலத்தில் கடுமையாக இந்தியத் தலையீட்டை எதிர்த்தது. இப்போது காட்சி மாறுகின்றது. ஜே.வி.பி.க்கும் இந்தியாவின் தேவை அதிகமாக இருக்கின்றது. தேர்தலில் வெற்றி பெறுவதற்கு இந்தியாவின் ஆதரவு அவர்களுக்கு அவசியம். இந்தியாவுக்கும் ஜே.வி.பி. தேவையாகவுள்ளது. இந்தியாவின் திட்டங்களை இலங்கையில் எதிர்க்கும் சக்தியாக ஜே.வி.பி. இருப்பதால், அதனைச் சாந்தப்படுத்தவேண்டிய தேவை இந்தியாவுக்கும் உள்ளது. இதனால்தான், இருதரப்பினரும் ஒரு புள்ளியில் சந்திப்பதற்கு விரும்புகின்றார்கள். ஜே.வி.பி. தலைவர்களுடைய இந்திய விஜயத்தையடுத்து இந்த விடயத்தில் ஒரு சமரசம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சீனாவுடன், அல்லது பாகிஸ்தானுடன் இலங்கை உடன்படிக்கைகளைச் செய்யும் போது, சிங்கள தேசிய வாதிகள் அதனை எதிர்க்கவில்லை. சீனாவுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு இலங்கை அரசாங்கம் கொடுத்த போது அதற்கு எதிராக பாரிய எதிர்ப்புக்கள் எதுவும் உருவாகவில்லை.

ஆனால், கொழும்புத் துறைமுக கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குக் கொடுக்க முற்பட்ட போது மிகப்பெரிய எதிர்ப்பு கிளம்பி, அந்த முயற்சியே நிறுத்தப்பட்டது. தென்பகுதியில் உள்ள தேசியவாதிகள் தமிழ்நாட்டின் ஊடாகத்தான் இந்தியாவைப் பார்க்கிறார்கள். அதாவது, இந்தியா வரும்போது தமிழகத்தில் உள்ள தமிழர்களுக்கும் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் வலுப்படும் அது, தம்மைப் பாதிக்கும் என்ற அச்சம் சிங்களத் தேசியவாதிகளிடம் உள்ளது.

இலங்கை - இந்திய வர்த்தகம் ஏற்கனவே இந்தியாவுக்குச் சார்பானதாகவே இருக்கிறது. இந்த உடன்படிக்கை அந்த நிலையை மேலும் அதிகமாக்கலாம் என்ற அச்சம் சிங்கள தேசியவாதிகளிடம் உள்ளது. இந்தியாவின் சந்தையாக இலங்கை மாறிவிடும் என அவர்கள் அஞ்சுவதால்தான் இதனை அவர்கள் எதிர்க்கிறார்கள்.

தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இலங்கையிலுள்ள பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் சேவைகள் தேவையாக இருந்தால், அது இலங்கைக்கு பயனுள்ளதாக அமையலாம். ஆனால், இங்கே கேள்வி அதிகமாகவும், அங்கு நிரம்பல் அதிகமாகவும் இருக்கின்றது. உதாரணமாக – வைத்தியவர்கள் பெருமளவுக்கு நாட்டைவிட்டு வெளியேறிச் செல்வதால் எமக்கு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அமெரிக்கா பறந்தது எதற்காக?

## மேற்குலகின் புதிய நகர்வுகள்...

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் *செவ்வி*



**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அமெரிக்காவுக்கான ஒரு வார கால அரசியல் பயணத்தை மேற்கொண்ட பின்னர் இந்த வாரம் நாடு திரும்பியுள்ளார். தன்னுடைய அமெரிக்க விஜயம், அங்கு இடம்பெற்ற பேச்சுக்கள், போன்றவை குறித்து தாயகக் களம் நிகழ்வில் அவர் தனது கருத்துக்களை முன்வைக்கின்றார். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் செய்யவும்.**

**அமெரிக்காவுக்கான உங்களுடைய விஜயம் யாருடைய அழைப்பின் பெயரில் இடம்பெற்றது. அங்கு நீங்கள் யாரை சந்தித்திருந்தீர்கள்?**

கடந்த நவம்பர் மாதம் அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் அழைப்பு கிடைத்திருந்தது. அவர்களுடைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதான உரையை நிகழ்த்துமாறு அழைத்திருந்தார்கள். அந்த நிகழ்வையொட்டி கணிசமான சந்திப்புக்களுக்கான ஏற்பாடுகள் அங்குள்ள தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், எனக்கான வீசா தாமதமானதால் நேரடியாக நான் அங்கு செல்ல முடியவில்லை. அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்புக்கள் தாமதமாகி இப்போதுதான் இடம்பெற்றது.



இந்தச் சந்திப்புக்களில் இராஜாங்கத் திணைக்களத்துடனான சந்திப்பு முக்கியமானது. அதேபோன்று செனட் சபையின் வெளிவிவகாரப் பிரிவின் நிர்வாகக் கட்டமைப்புடனும் சந்திப்பு இடம்பெற்றது. பிரதிநிதிகள் சபை வெளிவிவகார குழுவின் நிரந்திர அதிகாரிகளுடனான சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது. இவற்றைவிட தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர்களையும் சந்திக்க முடிந்தது. இராஜாங்கத் திணைகக்களத்தில் இரண்டுவிதமான சந்திப்புக்கள் இடம்பெற்றது. ஒன்று அதனுடைய அரசியல் பிரிவு. அதன் அதிகாரிகளையும் சந்திக்க முடிந்தது.

இராஜாங்கத் திணைக்களத்துக்கு கீழ் வரும் சர்வதேச குற்றவியல் பிரிவின் அதிகாரிகளுட னும் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. விஷேடமாக பொறுப்புக்கூறல் தொடர்பாக எங்களுடைய கருத்துக்களைப் பதிவு செய்வதற்கு அவர்கள் விரும்பினார்கள். அமெரிக்க நிலப் பரப்பைத் தாண்டி இடம்பெறக் கூடிய குற்றங்களை இந்தப் பிரிவுதான் கையாள்கின்றது.

**அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கை வகுப்புடனும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்களை சந்தித்திருக்கின்றீர்கள்?**

இலங்கை தொடர்பாக குறிப்பாக ஈழத் தமிழர் விடயம் சார்ந்து அமெரிக்க அணுகுமுறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமானால், இந்தத் தரப்புக்கள் ஊடாகத்தான் செய்யமுடியும். அதற்காகத்தான் இந்தச் சந்திப்புக்களை மேற்கொண்டோம். இதற்கு மேலதிகமாக – வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுடனும் சந்திப்பை மேற்கொண்டிருக்கலாம். ஆனால், என்னுடைய இந்த விஜயத்தின் போது, அதற் கான வாய்ப்பு கிடைக்கவில்லை. எதிர் காலத்தில் அவர்களையும் சந்திப்பது பொருத்தமானதாக இருக்கும்.

**உங்களுடைய கருத்துக்களுக்கு அவர்களுடைய பிரதிபலிப்புக்கள் எவ்வாறானதாக இருந்தது? அவர்கள் எவ்வாறு செயற்படுவார்கள் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?**

ஈழத் தமிழர்கள்பால் அக்கறை கொண்ட தரப்புக்கள் என்றால், அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள். மற்றும் இந்தியா என்றுதான் நாம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அவர்கள் இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் மேலாதிக்கம், மற்றும் இலங்கையில் தமது நலன் சார்ந்த முறையில் அணுகும் போக்கு ஒன்றை நாம் காண்கிறோம்.

விஷேடமாக சீனா *2005* ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகிய காலத்திலிருந்து இந்தியா, அமெரிக்கா ஆகிய இந்த இரண்டு தரப்பும், இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் தன்மையுடன் செயற்படும் போக்கைத்தான் எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனைத்தான் நாங்கள் புகோள அரசியல் என்று கடந்த பதினைந்து வருடங்களாக சுட்டிக் காட்டி வருகின்றோம். இவ்வாறான புகோள நலன்சார்ந்த போட்டித் தன்மை இலங்கையில் உருவாகியிருந்தாலும் கூட, ராஜபக்ஷக்களைக்



தொடர்ச்சி *11*ஆம் பக்கம்

# மீனவர்களின் வாழ்வாதாரத்தில் பாதிப்பு



ஹஸ்பர் ஏ ஹலீம்

அண்மையில் எரிபொருட்களின் விலை ஏற்றத்தை தொடர்ந்து ஆழ் கடல் மீனவர்கள் உட்பட இயந்திர படகு மூலமான மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மண்ணெண்ணெய் விலை ஏற்றம் காரணமாக இவர்கள் பாதிப்படைந்துள்ளனர். திருகோணமலை மாவட்டத்தை பொறுத்த மட்டில் கரையோர பகுதியில் உள்ள மீனவர்கள் வாழ்வாதாரமாக மீனவத் தொழிலை நம்பியே வாழ்ந்து வருகிறார்கள்.

தற்போது மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பினால் பல்வேறு நஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி பட்டினமும் சூழலும், கிண்ணியா, மூதூர் போன்ற பிரதேச செயலகப் பகுதிகளை உள்ளடக்கிய கரையோர மக்கள் பெரும்பாலும் கடல் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். மிக நீண்ட தூரம் சென்று மீன்களை பிடித்து வந்த போதிலும் சில வேளை வெறுங்கையுடன் வீடு திரும்ப வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர். மண்ணெண்ணெய் வாங்கும் பணம் கூட கிடைக்காமல் போகின்றது.




நாட்டின் மீன் பிடித் துறை மூலமாகவும் மக்களின்ஜீவனோபாயம்முக்கியபங்குவகிக்கிறது. இத்துறை மூலமாக வளர்ச்சியடைந்த மக்களாக மாற்ற மீன் பிடி துறைமுகங்களை அமைத்து சீரான நிலைக்கு கொண்டு செல்ல வேண்டுமாக இருந்தால் அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பால் தினமும் மீன் பிடி துறை மூலமான வருமானம் பாதித்துள்ளமையால் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது முதல் பிரத்தியேக வகுப்புக்களுக்கான செலவு என கல்வி நடவடிக்கைகளை பாதித்து வருகின்றது. இது தொடர்பில் கிண்ணியா மீனவர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார் “கடல் தொழிலுக்கு சென்று மீன்களை பிடித்த போதிலும் எண்ணெய் விலை அதிகமாக உள்ளதால் நட்டம் ஏற்படுகிறது அரசாங்கம் மானிய திட்டம் ஊடாக மண்ணெண்ணெயை பெற்றுத் தர வேண்டும் இல்லாது போனால் எங்களது வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படக் கூடும் “ என்றார்.

கிழக்கு மாகாணம் உட்பட வடகிழக்கு கரையோர மீனவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மீனவர்களுக்காக கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டம் அவர்களுக்கு பல பாதகங்களை ஏற்படுத்தும். இவ்வாறு போனால் மீனவத் தொழிலை செய்ய முடியாது கைவிட வேண்டிய நிலை ஏற்படலாம். அரசாங்கம் மீனவர்களுக்கான சலுகைகளை வழங்குவதுடன் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் அப்போது தான் மீனவ சமூகங்களுக்கு விடிவு கிடைக்கும்.




“மீனவத் தொழிலை வாழ்வாதாரமாக கொண்டு தாங்கள் வாழவேண்டுமாக இருந்தால் மண்ணெண்ணெய் விலையை குறைத்து அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டும் வெள்ள காலநிலையால் கடல் நீர் கலங்கலாக காணப்படுவதால் மீன்கள் படுவதும் குறைவு” என கடல் தொழிலாளி ஒருவர் தெரிவித்தார்.

மீன் பிடி துறையை விருத்தி செய்ய அவர்களுடைய பல்தரப்பட்ட பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். மீன்பிடி துறைமுகங்களை அமைத்து கடல் தொழிலாளர்களின் சங்கங்களை வலுப்படுத்தி விசேட திட்டம் ஊடாக உரிய அமைச்சு கவனம் எடுக்க வேண்டும். விசேடமாக நாட்டில் வடகிழக்கு மீனவர்கள் பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

மீனவச் சமூகத்தின் வாழ்வாதாரம் உயர்த்தப்பட்டு அவர்களுக்கு விடிவு கிடைக்க



வேண்டும். தற்போதைய நிலையில் அத்தியவசிய பொருட்களின் விலை உயர்வு அவர்களை மேலும் தாக்கத்துக்கு உள்ளாக்கியுள்ளதுடன் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளான அஸ்வசும் கூட பலருக்கு இல்லாமல் போனதால் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். மின்சாரம் நீர் கட்டணம் அதிக அதிகரிப்பு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இவர்களுக்கான புதிய பொறிமுறை ஊடாக சிறந்த வாழ்வாதார திட்டத்தை ஏற்படுத்துவது உரியவர்களின் கடமையல்லவா.

மீனவர்களது பிரச்சினைகள் ஒரு போதும் தீர்க்கப்படுவதில்லை. இழுவை படகு பிரச்சினை இந்திய இலங்கை கடல் எல்லை பரப்பு பிரச்சினை சுருக்கு வலை பிரச்சினை என பல பிரச்சினைகள் காணப்படுகிறது. வீதிமறியல் போராட்டங்களை மீனவர்கள் அவ்வப்போது முன்னெடுத்த போதிலும் தீர்வுகள் கிடைக்கப் பெறுவதில்லை எனவும் அங்கலாய்க்கின்றனர்.

மீன்பிடி துறையை அதிகரிப்பதனால் நாட்டின் அந்நியச் செலவாணிக்கு பாரிய பங்கு வகிக்கும் டின் மீன் ஏற்றுமதி, கருவாடு உற்பத்தி போன்றவற்றால் பல சாதகமான திட்டம் ஊடாக பல நன்மைகளை பெற உற்பத்திகளை அதிகரிக்க துறைசார் பயிற்சிகள் மூலமாக பல நன்மைகளை அடைந்து பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வர முயற்சிக்கலாம்.




• • •

# ‘மலையக தசாப்தம்’ வெற்று வாக்குறுதியாகிவிடக்கூடாது

துரைசாமி நடராஜா

இலங்கையில் மலையக மக்களின் வாழ்வியல் நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்ச்சியாகவே சமூக ஆர்வலர்களால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. எனினும் சாதக விளைவுகள் குறிப்பிடத்தக்கதாக இல்லாத நிலையில் வாக்குறுதிகளால் இச்சமூகத்தை திருப்திப்படுத்துவதையே சிலர் நோக்கமாகக் கொண்டுள்ளனர். கடந்தகால மற்றும் சமகால ஆட்சியாளர்களும் இதற்கு விதிவிலக்காகி விடவில்லை. இந்நிலையில் மலையக மக்களின் பொது உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக எதிர்வரும் காலத்தில் ‘மலையக தசாப்தம்’ எனப்படும் பத்து வருட பல்நோக்கு கிராம மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதன் நம்பகத்தன்மையை நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.



மலையக மக்களின் வரலாறு இந்நாட் டில் 200 வருடங்களாகியுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமேயாகும். எனினும் இம்மக்களின் வரலாற்றுக்கேற்ப வாழ்க்கை நிலைமைகள் அபிவிருத்தி அடைந்துள்ளனவா என்று சிந்திக்கையில் திருப்தியற்ற வெளிப்பாடுகளே மேலோங்கிக் காணப்படுகின்றன.

மலையக சமூகத்தின் கட்டமைப்பில் சிற்சில மாறுதல்கள் இப்போது ஏற்பட்டு வருகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. என்றபோதும் இது இன்னும் முழுமை பெறுவதாக இல்லை. மலையக சமூகத்தின் கல்வி ஈடுபாடு மெச்சத்தக்கதாக உள்ளது. தமது பிள்ளையை கல்வி பெறச்செய்து உச்சத்துக்கு உயர்த்த வேண்டும் என்ற ரீதியில் பல பெற்றோர்கள் சிரத்தைகாட்டி வருகின்றனர். இதற்கேற்ப அண்மைகாலமாக மாணவர்களின் கல்வி அடைவுகள் அதிகரித்துள்ளதோடு இதனூடாக பெறுபேற்று அபிவிருத்தியையும் அவதானிக்க முடிகின்றது.



மலையக இளைஞர்கள் பலர் இன்று அரசதுறை தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொண்டுள்ளனர். ஆசிரியர்கள் என்ற நிலையிலிருந்தும் முன்னேறி கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பலரும் இச்சமூகத்தில் உருவாகியுள்ளனர். இலங்கை நிர்வாக சேவையிலும் எம்மவர்கள் கோலோச்சுகின்றனர். கிராமசேவை உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளிட்ட பல அரசு உத்தியோகங்களிலும் எம்மவர்கள் ஈடுபட்டு சமூகத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றனர்.

இவற்றைத்தவிர தனியார் தொழிற்றுறை மற்றும் வர்த்தகத்துறை என்பவற்றிலும் மலையக சமூகத்தினர் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டு வருகின்றனர். இவற்றோடு இம்மக்களின் குடியிருப்பு நிலைமைகளும் முன்னரைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளன என்பதையும் குறிப்பிட்டாதல் வேண்டும். தனிவீடு என்பது இவர்களில் பலருக்கு இன்னும் கனவாக இருந்து வருகின்றபோதும் இருக்கின்ற வீட்டினை நேர்த்தியாக வைத்திருக்க வேண்டும் என்பதில் இவர்களின் ஆர்வம் அதிகரித்துக்காணப்படுகின்றது. இன்றைய இளைஞர்கள் இதில் அதிகமாகவே ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவையெல்லாம் மலையக சமூகத்தினர் தொடர்பில் சாதகமான பக்கங்களாக காணப்பட்ட போதிலும் இதற்கு எதிரான பக்கங்களும் அதிகமாகவே காணப்படுகிறது. நாட்டின் தேசிய வருவாய்க்கு தோள் கொடுக்கும் இம்மக்கள் இன்னும் பல தேவைகளும் நிறைவு செய்யப்படாத நிலையில் துயர வாழ்க்கை வாழ்ந்து வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். கூடிய நேரம் வேலைசெய்து குறைந்தளவு ஊதியத்தை இவர்கள் பெற்றுக் கொள்ளும் நிலையில் இவர்களின் உழைப்பை உறிஞ்சி முதலாளிகள் கொளுத்திருக்கின்றனர். இதேவேளை தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனியினர் இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளைக் கூட செய்து கொடுப்பதற்கு தயக்கம் காட்டி வருவதாக தொழிலாளர்கள் உள்ளம் குமுறுகின்றனர்.




கம்பனியை நிர்வகிக்கும் மேல்மட்ட உத்தியோகத்தர்களுக்கு அதிகளவு ஊதியம் வழங்கப்படுகின்ற நிலையில் உழைக்கும் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியத்தைப் பெற்றுக் கொடுப்பதில் கம்பனியினர் ஆர்வம் செலுத்துவதில்லை. சம்பள அதிகரிப்பு தொடர்பாக பேசப்படும் போதெல்லாம் ஆயிரம் காரணங்களை முன்வைத்து பஞ்சப்பாட்டு பாடும் கம்பனியினர் தம்மை கிள்ளுக்கீரையாக கருதுவதாகவும் தொழிலாளர்கள் மேலும் கருத்து தெரிவிக்கின்றனர். இவற்றுக்கிடையே கம்பனியினர் பிரேரிக்கும் வெளியார் உற்பத்தி முறை எந்தளவுக்கு தமக்கு சாதக விளைவுகளை ஏற்படுத்தும் என்பது தொடர்பாகவும் தொழிலாளர்களுக்கு சந்தேகமுள்ளது.

பெருந்தோட்ட தேயிலை விளைநிலங்கள் தற்போது படிப்படியாக குறைந்து வரும் நிலையில் அபிவிருத்தி என்னும் போர்வையில் இந்நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு வருகின்றமை குறித்தும் கண்டனங்கள் இல்லாமலில்லை. இதனிடையே மலையக மக்களின் செறிவைக் குறைத்து அவர்களை சகல துறைகளிலும் நிர்வாணப்படுத்தும் ஒரு முயற்சியே பெருந்தோட்ட தேயிலை விளைநிலங்களின் சுவீகரிப்பின் அடிப்படையாகும் என்று கூறுவார்களும் உளர். எவ்வாறெனினும் மலையக சமூகத்தினரின் நெருக்கீடுகள் ஒரு போதும் குறைவில்லாது தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதே கசப்பான உண்மையாகும்.



1948ம் ஆண்டு இந்தியவம்சாவளி மக்களின் பிரசாவுரிமை மற்றும் வாக்குரிமை என்பன பறிக்கப்பட்ட நிலையில் பின்னர் இவற்றை மீளவும் பெற்றுக் கொள்ளும் வரை அரசியலில் இம்மக்கள் அநாதைகளாகி இருந்தனர். இவற்றை மீளவும் பெற்றுக்கொண்டதன் பின்னரே அரசியல் பிரதிநிதித்துவம் படிப்படியாக அதிகரித்தது. இந்நிலைக்கு தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையும் கை கொடுத்தது என்பதும் முக்கியஸ்தர்களின் கருத்தாகும். எனவேதான் சிறுபான்மையினருக்கு நலனளிக்கும் இத்தேர்தல் முறையின் இருப்பினை தொடர்ந்தும் உறுதிப்படுத்த வேண்டும் என்று சிறுபான்மை பிரதிநிதிகள் கோஷமெழுப்புகின்றனர். இதனிடையே புதிய தேர்தல் முறை ஒன்றினை அறிமுகம் செய்கின்றபோது சிறுபான்மையினரின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்படாதவகையில் அது இடம்பெற வேண்டுமென்றும் வலியுறுத்தல்கள் இருந்து வருகின்றன.

இவற்றுக்கும் மத்தியில் இந்தியவம்சாவளி தமிழர்களுக்கு சமத்துவமான, ஆரோக்கியம் மிக்க வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டியதன் அவசியத்தை கோபியோ அமைப்பின் இலங்கைக்கான தலைவர் குமார் நடேசன் வலியுறுத்தியுள்ளார். மேலும் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளி தமிழர்களின் 200 ஆண்டு கால வரலாறு என்பது மிகப்பெரிய வரலாற்றுத் தடமாகும். சர்வதேசத்தின் மத்தியில் தேயிலை உற்பத்தியின் ஊடாக இலங்கைக்கு தனி இடத்தைப் பெற்றுக் கொடுத்த பெருமை இந்திய வம்சாவளி தமிழர்களைச் சாரும். 19 ம் நூற்றாண்டில் பிரித்தானிய சந்தையில் இலங்கையின் தேயிலை மிகப்பெரிய அளவில் பிரசித்தமாகியது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று வரை அடிப்படை உரிமைகளுக்காக இவர்கள் போராடி வருகின்றனர்.

ஒருநாட்டில் சமத்துவமான வாழ்க்கை

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# கேள்விக்குறியாகும் இந்தியாவின் ஜனநாயக அறைகூவல்கள்

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரில் காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுகளால் இது வரையில் 28,000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், ஏறத்தாழ 70,000 பேர் காயமடைந்துள்ளனர்.

உலகில் உள்ள மக்கள் அனைவரும் சமூக வலைத்தளங்களில் நேரிடையாக பார்த்துக் கொண்டிருக்க இந்த மனிதப் படுகொலைகள் எந்தவிதமான தடைகளும் இன்றி உலகில் ஜனநாயக நாடுகள் என தம்மை கூறிக்கொள்ளும் மேற்குலக நாடுகளின் ஆயுத உதவிகளுடன் நிகழ்ந்து வருகின்றன.



இந்த இனப்படுகொலையை நிறுத்துவதற்கு தென்னாபிரிக்கா நீதிகோரும் வழக்கு ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் நீதிமன்றத்தில் தொடுத்திருந்தாலும் அதுவும் இந்த இனப்படுகொலையை நிறுத்த உதவவில்லை. இந்த நிலையில் பல நாடுகள் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டுள்ள அதேசமயம் சில நாடுகள் இஸ்ரேலுக்கான ஆயுத விநியோகங்களையும் தடை செய்துள்ளன.

ஆனால் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் இஸ்ரேலுக்கு இந்தியாவின் அதானி குழுமத்தின் ஆயுத உற்பத்தி நிறுவனமான Adani-Elbit Advanced Systems India Ltd. என்ற நிறுவனம் வழங்கிய 20 Hermes 900 Kochav or Star என்ற ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் புதிய சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளன. எனினும் விமானங்கள் களமுனைக்கு அனுப்பப்பட்டது தொடர்பில் இரு நாடுகளும் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.



இஸ்ரேலின் Elbit நிறுவனமும், அதானியின் Adani Defence and Aerospace நிறுவனமும் இணைந்து 2018 ஆம் ஆண்டு முதல் ஆயுத உற்பத்திகளை இந்தியாவில் மேற்கொண்டு வருகின்றன.

காசாவில் அதிக மக்கள் தஞ்சமடைந்துள்ள ரபா பகுதி மீது தாக்குதல்களை நடத்தப்போவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ள நிலையில் இந்தியா இந்த தாக்குதல் விமானங்களை வழங்கியுள்ளது. ரபா பகுதி மீதான தாக்குதல் மிகப்பெரும் மனிதப்பேரவலத்திற்கு வழிவகுக்கும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருந்தது.

இஸ்ரேல் மேற்கொண்டுவரும் படை நடவடிக்கைகளில் இந்த விமானங்கள் மிகப் பெரும் பங்கை வகிக்கின்றன. அது உளவு நடவடிக்கைகளுக்கும், குண்டுவீச்சு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுவதுண்டு.

2014 ஆம் ஆண்டு பாலஸ்தீனம் மீதான தாக்குதலுக்கு இஸ்ரேல் இந்த விமானத்தை முதலில் பயன்படுத்தியிருந்தது. அந்தப் போரில் 2,000 பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டதுடன், 10,000 மக்கள் காயமடைந்திருந்தனர் என படைத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அங்கு கொல்லப்பட்டவர்களில் 37 விகிதமானவர்கள் ஆளில்லாத தாக்குதல் விமானங்களினால் கொல்லப்பட்டதாக மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்திருந்தன.



தற்போதைய போரில் இந்தியாவின் தற்போதைய அரசு இந்தியாவின் முன்னைய கொள்கைகளை மாற்றி இஸ்ரேலுக்கு தனது ஆதரவுகளை வழங்கிவருவதை இந்த நடவடிக்கை மேலும் உறுதிப்படுத்தியுள்ளதுடன், இது பாலஸ்தீனம் தொடர்பில் இஸ்ரேலின் கொள்கைகளை இந்தியா ஆதரிப்பதையும் காட்டுவதாக மனித உரிமை மற்றும் படைத்துறை அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் தென்னிந்திய மாநிலமான ஐதராபாத்தை தளமாகக் கொண்ட அதானியின் நிறுவனம் வழங்கிய விமானங்கள் தற்போது நடைபெறும் போரில் முக்கிய பங்கு வகிக்கின்றன. நடுத்தர, தூரவீச்சுக்கொண்ட, தொடர்சியாக 30 மணிநேரம் பறக்கும் இந்த விமானங்கள் உளவுத் தகவல்களை சேரிப்பதுடன், தாக்குதல்களையும் மேற்கொள்ளவல்லவை. 30,000 அடிகள் உயரத்தில் பறக்கும் இந்த விமானம் 450 கிலோ வெடிகுண்டுகளை காவிச்செல்லவல்லது.

மேற்குக்கரை மற்றும் காசா பகுதிகள் மீதான பல தாக்குதல்களில் இந்த விமானங்களே பயன்படுத்தப்பட்டிருந்தன. கொலைகார விமானங்கள் (Killer Drones) என அழைக்கப்படும் இஸ்ரேல் வசம் உள்ள 4 விமானங்களில் இதுவும் ஒன்று.

எனவே இஸ்ரேலின் தற்போதைய அவசர ஆயுத தேவையை இந்திய நிறுவனம் பூர்த்தி செய்துள்ளது. இஸ்ரேலின் இனஅழிப்புக்கு துணை போகும் மேற்குலக கூட்டணியில் இணைவதை விடுத்து தென்னாபிரிக்கா தலைமையிலான தெற்குலக மண்டலத்தில் இந்தியா ஒரு முன்னுதாரணமாக விளங்கவேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம் என பாலஸ்தீனத்தின் பி.டி. எஸ் தேசிய சபையைச் சேர்ந்த சியார் ஹீவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஆயுதங்கள் பாலஸ்தீன மக்களை படுகொலை செய்வதற்கு பயன்படுத்தப்படுவது அதிர்ச்சிகரமானவை ஆனால் ஆச்சரியமானது அல்ல ஏனெனில் கடந்த 10 வருடங்களாக இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவுகள் வலுப்பட்டு வந்துள்ளது என பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் அந்தோனி லொவன்ஸ்ரின் தெரிவித்துள்ளார்.



இந்த இரு நாடுகளின் உறவுகள் அனைத்துலக மட்டத்தில் அதிக கவனத்தைபெறவில்லை என்றாலும் உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடு என கூறும் இந்தியா இனப்படுகொலைக்கு உதவுவது தொடர்பில் நாம் மேலதிக கவனத்தை செலுத்தவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் காலத்தில் முஸ்லீம் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரித்தே வருகின்றன. காஸ்மீரில் காணி அதிகாரத்தை நீக்கியது, அயோத்தியில் இராமர் ஆலயம் அமைத்தது என அதன் பட்டியல் நீளம். மோடியின் ஆட்சிக் காலத்தில் தான் இஸ்ரேலுடனான உறவுகளும் அதிகம் வளர்ச்சி கண்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் அது ஒரு பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை இஸ்ரேலிடம் இருந்து வாங்குகின்றது. கடந்த 2015 - 2019 காலப்பகுதியில் இஸ்ரேலிடம் இருந்தான ஆயுத கொள்வனவு 175 விகிதம் அதிகரித்துள்ளது.



இரு நாடுகளும் இணைந்து ஆயுத உற்பத்தியிலும் ஈடுபடுகின்றன. எக்ஸ்-95 தாக்குதல் துப்பாக்கி, Galil குறிபார்த்துச்சுடும் துப்பாக்கி Negev இலகு இயந்திர துப்பாக்கி மற்றும் Hermes 900 ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் என்பன அவற்றில் சில.

இஸ்ரேலின் ஆயுததேவைகளை விரைவாக உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா விளங்குவதுடன், இஸ்ரேலின் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தனது படையினரை நவீனமயப்படுத்தும் திட்டத்தையும் இந்தியா மேற்கொண்டுவருகின்றது.

ஆனால் இஸ்ரேல்-பாலஸ்தீன போர்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# பாகிஸ்தானின் அரசியல் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக மாற்றியிருக்கும் தேர்தல் முடிவுகள்



## பகுதி 1

**தமிழில்: ஜெயந்திரன்**

தேர்தலுக்கு ஒரு சில வாரங்களே இருக்கும் ஒரு சூழலில், கைதுசெய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்ட, பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் பிரதம மந்திரியுமாகிய இம்ரான் கானின் தெஹ்றீக் இ இன்சாவ் *Tehreek-e-Insaf (PTI)* என்ற கட்சியைச் சார்ந்த சுயேச்சை வேட்பாளர்கள் நாடாளுமன்றத்தில் மிகவும் அதிகமான ஆசனங்களை வென்றிருக்கின்றார்கள். அரசியல் நோக்கமே தனது கைதுக்கு காரணம் என கான் தெரிவித்திருக்கிறார். அரசியலைத் தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக அந்தத் தென்னாசிய நாட்டில் இராணுவமே இயங்கிவந்த பின்புலத்தில் இந்தத் தேர்தல் முடிவுகள் எதிர்பாராத நிகழ்வுகள் என்பது குறிப்பிடத்தக்கது.




பெப்ரவரி 8ம் திகதி நடைபெற்ற தேர்தலில் பிரிஐ (PTI) கட்சி சார்ந்த அதிக எண்ணிக்கையான சுயேச்சை வேட்பாளர்கள் ஆசனங்களைப் பெற்றிருப்பதாக தேர்தல் ஆணையம் ஞாயிற்றுக் கிழமை செய்தி வெளியிட்டது. 265 ஆசனங்களில் 97 ஆசனங்களைப் பெற்று, இம்ரானின் கட்சி முன்னணியில் திகழ்கிறது. இம்ரானின் கட்சியைச் சாராத இன்னும் 5 சுயேச்சை வேட்பாளர்களும் நாடாளுமன்றத்தில் ஆசனங்களை வென்றிருக்கிறார்கள்.



இம்ரான்கானின்பிரிஐகட்சிக்குஅடுத்ததாக அதிக ஆசனங்களை, அதாவது 76 ஆசனங்களை வென்றிருப்பது கானின் நீண்ட கால எதிரியான நவாஸ் ஷெரிவின் *(Nawas Sharif)* தலைமையில் இயங்கும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் *(Pakistan Mulim League - PMLN)* கட்சியாகும் . பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி 54 ஆசனங்களை பெற்றிருக்க, பல சிறிய கட்சிகளும் நாடாளுமன்றத்தில் ஆசனங்களைப் பெற்றிருக்கின்றன. இதன் காரணமாக அரசை அமைப்பதற்கு முக்கிய கட்சிகள் ஏனைய கட்சிகளுடன் தீவிர பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. எந்தவொரு கட்சியும் தெளிவான பெரும்பான்மையைப் பெறாத சூழலிலும், வாக்குகளில் மோசடிகள் நடைபெற்றிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படும் பின்புலத்திலும், பாகிஸ்தானின் அரசியல் மற்றும் பொருண்மிய எதிர்காலம் கேள்விக்குறியாக மாறியிருக்கிறது.

பெப்பிரவரி 8ம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலைத் தொடர்ந்து, நாட்டின் அரசியல் எதிர்காலம் தொடர்பாக நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகளின் முக்கியத்துவம் தொடர்பாக பல்வேறு வியாக்கியானங்கள் முன்வைக்கப்படுகின்றன. தெஹ்றீக் ஈ இன்சாவ் கட்சியின் ஆதரவில் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர்கள் அடைந்திருக்கும் வெற்றி தொடர்பாகச் செய்திகளை வெளியிடும் போது, நாட்டு மக்களின் முடிவை அந்த நாட்டு அதிகாரம் எப்படிக் கையாளப் போகின்றது என்றும் பாகிஸ்தான் அரசியல் கலாச்சாரத்தில் இது ஒரு மாற்றத்தை கொண்டுவருமா என்றும் ஊடகவியலாளர்களும் அரசியல் ஆய்வாளர்களும் கேள்வி எழுப்பியுள்ளனர். தேர்தலுக்கு முன்னர் அந்த நாட்டில் நிலவிய சூழலை உற்றுநோக்கும் போது, இவ்வாறான விவாதங்கள் வியப்பைத் தருவனவாக அமைந்திருக்கின்றன.



பாகிஸ்தான் சனநாயக இயக்கத்தின் கூட்டணித் தலைவர்கள், தமது அதிகாரத்தைக் கைவிட்டு, பாகிஸ்தானில் மக்களின் மிக அதிக செல்வாக்கைப் பெற்றிருக்கின்ற இம்ரான் கானின் ஆதரவாளர்களிடம் ஆட்சியைக் கொடுக்க ஆயத்தமாக இல்லை என்ற விடயம், கடந்த வருடம், அதாவது 2023ம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திலேயே, தெரியவந்ததாகவும் அறியக்கூடியதாக இருக்கிறது. 2022ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்து, பிரதம மந்திரி பதவியிலிருந்து இம்ரான் கான் தூக்கியெறிப்பட்டார். உண்மையில் அவ்வாறான ஒரு நிகழ்வுக்கு பாகிஸ்தான் இராணுவத்துடன் இணைந்து அமெரிக்கா மேற்கொண்ட சூழ்ச்சியே காரணம் என்று இம்ரான் கான் அப்போது குற்றஞ்சாட்டியிருந்தார்.

இம்ரான் கானின் கட்சியுடன் ஆட்சியைப் பகிர்ந்துகொள்ள குறிப்பாக பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சியின் தலைமையே விரும்பவில்லை என்பதுடன், தங்கள் தலைவரான நவாஸ் ஷரீவ், திரும்பவும் நான்காவது தடவையாக பிரதம மந்திரி பதவியை ஏற்பதற்கான பிரச்சாரத்தைத் தொடங்க, இலண்டனில் இருந்து நவாஸ் ஷரீவ் நாடு திரும்பக் காத்திருந்தார்கள். பாகிஸ்தான் முஸ்லீம் கட்சியிடமிருந்து வருகின்ற முயற்சிகளையெல்லாம்இம்ரான்கானின்கட்சியில்முக்கிய ஆதரவாளர்கள் 'இலண்டன் திட்டம்' என்ற பெயர் கொண்டு அழைத்தார்கள். அதாவது அவ்வாறான திட்டங்கள் பாகிஸ்தான் இராணுவத்துடன் இணைந்தே மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் என்று அவர்கள் கருதினார்கள்.



இது எவ்வாறிருப்பினும், தாங்கள் முடிவு செய்த திட்டங்களைச் செயற்படுத்த அரசியல் வாதிகளுக்கு கூடுதலான கால அவகாசம் தேவைப் பட்டது. பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் கீழ் அவையாகிய தேசியப் பேரவை, உரிய காலத்துக்கு முன்கூட்டியே கலைக்கப்பட்டது. இவ்வாறு தேர்தலை 60 நாட்களுக்குள் நடத்துவதற்குப் பதிலாக 90 நாட்களுக்குள் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதுவும் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. திடீரென வாக்காளர் எண்ணிக்கை பற்றிய ஆய்வைப் புதிதாக மேற்கொள்ளவும் தேர்தல் தொகுதிகள் தொடர்பான எல்லைகளை மீள வரையறை செய்யவும் முடிவு செய்யப்பட்டது. இவ்வாறான நிகழ்வுகளின் காரணமாக தேர்தல் நடைபெறும் திகதி இன்னும் பின்தள்ளப்பட்டது.

இவற்றின் காரணமாக, வாக்களிப்புத் தினம் பெப்பிரவரி மாதத்துக்குப் பின்போடப்பட்டது. இவ்வாறாக பாகிஸ்தான் அரசியலுக்கு நவாஸ் ஷரீவ் பெருமெடுப்பில் நாடு திரும்புவதற்குப் போதிய காலம் கொடுக்கப்பட்டது. தேர்தலில் பங்கெடுக்க முடியாத அளவில் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் நவாஸ் ஷரீவ் மேல்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

### 'மலையக தசாப்த ... தொடர்ச்சி ...

சகலருக்கும் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இந்திய வம்சாவளி மக்களைப் பொறுத்தமட்டில் அவர்களது அடிப்படை உரிமைகளான சொந்த நிலத்தில் தனிவீடு,தொழில் பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட விடயங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு ஆரோக்கியமான வாழ்க்கைச் சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இது தொடர்பில் அவர்களுக்கு போதுமான விழிப்புணர்வையும் வழங்க வேண்டும். அதேநேரம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் பெருந் தோட்டங்களை பொறுப்பேற்றுள்ள கம்பனிகள் தொழிலாளர்களை சுயமரியாதையுடன் நடத்து வதை உறுதிப்படுத்த வேண்டும். தோட்ட அதிகாரிகளுக்கு இது தொடர்பான வழி காட்டல்களைபயிற்சிகள்வாயிலாகபுகுத்துவதன் ஊடாக தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த முடியும்.

#### தனித்துவம் மிக்க சமூகம்

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 10 பேர்ச் நிலத்தில் வீடமைப்பு திட்டங்களை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறு முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டங்கள் வைத்தியசாலை, பாடசாலை, விளையாட்டு மைதானம், நீர்ப்பாசனம், தபால் நிலையம் மற்றும் வீதிகள் உள்ளிட்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு சூழலில் அமைவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். அதேநேரம் கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு என்பவற்றில் அதிக அக்கறை கொண்டு பெருந்தோட்டத் துறைவாழ் மாணவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கு அனைவரும் வழி சமைக்க வேண்டும் என்றும் குமார் நடேசன் மேலும் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை இலங்கையில் ஒரு தனித்துவம் மிக்க சமூகமாக, நாட்டின் தேசிய வருவாயில் கணிசமான வகிபாகத்தினைக் கொண்டவர்களாக இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் விளங்குகின்றார்கள். எனவே இலங்கை அரசாங்கத்தினால் தேசிய ரீதியில் உருவாக் கப்படும் ஆணைக்குழுக்கள், பேரவைகளில் இந்திய வம்சாவளி தமிழர்களின் பிரதிநிதித்துவம் கட்டாயமாக இடம்பெற வேண்டுமென சமத்து வம் மற்றும் உள்ளடக்கமான வளர்ச்சியை நோக்கிய நகர்வு 'இலங்கையில் இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் 200 வருடங்கள்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட சர்வதேச மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இம்மாநாடு அண்மையில் கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மலையக மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள் அநேக முள்ளன. தொழில்வாய்ப்பு, உட்கட்டமைப்பு மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளும் அநேகமாகும்.இவற்றிலிருந்தும் இவர்கள் விடுபட்டு தேசிய நீரோட்டத்தில் சங்கமிப்ப தற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் அவசியமாகும். இதனை காலம் தாழ்த்தாது உடனடியாக மேற்கொள்ளுதலும் வேண்டும். எனினும் இது தொடர்பான முன்னெடுப்புகள் திருப்திகரமானதாக இல்லை. அரசாங்கத்தின் வரவு செலவு திட்ட முன்மொழிவு களிலும்,தேர்தல் விஞ்ஞாபனங் களிலும் இம் மக்களின் வாழ்வில் அபிவிருத்தியை ஏற் படுத்தும் நோக்கில் பல்வேறு வாக்குறுதிகள் முன்வைக்கப்படுகின்றன.எனினும் இது குறித்த சாதக விளைவுகள் குறைவாகவே இருந்து வரு கின்றன.



இதேவேளை ஏற்கனவே மலையக மக்களின் மேம்பாட்டினை கருத்தில் கொண்டு ஐந்தாண்டுத் திட்டம், பத்தாண்டுத் திட்டம் என்றெல்லாம் திட்ட முன்வைப்புக்கள் இடம் பெற்றன. எனினும் காலப்போக்கில் இவை யெல்லாம் கிடப்பில் போடப்பட்டு, ஏட்டுச் சுரைக்காயாகிப் போனது கடந்தகால வர லாறாகவுள்ளது. இத்திட்டங்களை அமுல் படுத்தும் நோக்கில் அரசியல்வாதிகள் வழங் கிய அழுத்தங்களும் செல்லாக்காசாகிப் போன தையே அவதானிக்க முடிந்தது. ஆட்சியாளர்கள் அவ்வப்போது தமக்கென ஒரு நிகழ்ச்சி நிரலை வைத்துக் கொண்டு அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு பொய் வாக்கு றுதிகளை வழங்கி அவர்களின் ஆதரவை பெற்றுக் கொண்டவரலாறுகளுக்கு குறைவில்லை.

இது இப்போதும் தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றது. இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் பல சந்தர்ப்பங்களிலே பலிக்கடாவா க்கப்பட்டிருக்கின்றார்கள். இதய சுத்தியுடன் செயற்படும் இம்மக்கள் தொடர்ச்சியாக ஏமாற் றப்பட்டு வருவதென்பது கொடுமையிலும் கொடுமையாகும்.

இதனிடையே மலையக மக்களின் பொது உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 'மலை யக தசாப்தம் ' எனப்படும் பத்து வருட பல் நோக்கு கிராம மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருக்கின்றார். காலனித்துவ ஆட்சியின்போது ஏற்பட்ட பின்னடைவுகள் உள்ளிட்ட பல்வேறு கார ணங்களால் மலையக பிரதேசங்களில் பொது உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளில் போது மான வளர்ச்சி ஏற்படவில்லை. மலையக பிரதேசங்களில் பெரும்பான்மையினராக தமிழர் கள் வாழுகின்றனர்.

வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார அபிவிருத்தி, கிராமப்புற அபிவிருத்தி மற்றும் ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் உட்பட பல அபிவிருத்தி திட்டங் களை ஒன்றிணைத்து மேற்கொள்வதன் மூலம் அப்பிரதேச மக்களின் வாழ்வை மேம்படுத்துவ தற்கு விரைவான மற்றும் திட்டமிடப்பட்ட அணுகுமுறையை அரசாங்கம் மேற்கொள்வது தமது எதிர்பார்ப்பாகும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசாங்கம் 2024 க்கான வரவு செலவு திட்டத்தில் மலையக தசாப்தத்தின் பத்தாண்டு பல்நோக்கு கிராமிய மற்றும் சமூக அபிவிருத்தி திட்டத்துக்காக 10,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, களுத்துறை, பதுளை மற்றும் குருநாகல் உள்ளிட்ட பத்து மாவட்டங்களில் உள்ள 89 பிரதேச செயலக பிரிவுகளில் மலையக தசாப்தம் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. அமைச்சரவை அங்கீகாரத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர்களுக்கு திட்டத்தேர்வு அளவுகோல் மற்றும் செயற்பாட்டு மாதிரி குறித்து தெரிவிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்துக்கான பிரதேச மற்றும் மாவட்ட குழுக்களின் இணக்கப்பாடு கிடைத் தவுடன், மாவட்ட செயலாளர்களின் பூரண ஈடுபாட்டுடனும் ஏனைய அரச நிறுவனங் களுடனும் மற்றும் பிரதேச அலுவலகத்தின் பூரண ஆதரவுடனும் கூட்டு வேலைத்திட்டமாக இத்திட்டம் நடைமுறைபடுத்தப்படும் என்று அரசதரப்பு செய்திகள் வலியுறுத்துகின்றமையும் நோக்கத்தக்கதாகும். இந்த வருடம் தேர்தல் காலம் என்ற நிலையில் இந்த வாக்குறுதிகள் தேர்தலை மையப்படுத்திய வாக்குறுதிகளாக இருப்பதற்கும் அதிகளவில் சாத்தியமுள்ளது.

எது எவ்வாறானபோதும் நாட்டிற்கு முது கெலும்பாய் விளங்கும் மலையக சமூகத்தினரை கிள்ளுக் கீரையாக நினைப்பதோ அல்லது அவர்களுக்கு உரிய உரிமைகளை வழங்காது தொடர்ந்தும் அச்சமூகத்தை ஏமாற்றுவதோ ஒரு பிழையான அணுகுமுறையாகும். இது பாதக விளைவுகள் பலவற்றுக்கும் அடித்தளமாகும் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே இதனைவிடுத்து அம்மக்களுக்கு தேவையான உரிமைகளை உரியவாறு வழங்குவதற்கு ஆட்சி யாளர்கள் முன்வர வேண்டும். இதேவேளை மலையக அரசியல்வாதிகளின் பொதுநோக்கை மையப்படுத்திய ஒன்றிணைந்த அழுத்தம் சாதக விளைவுகள் பலவற்றுக்கும் உந்துசக்தியாகும் என்பதையும் மறந்துவிடலாகாது.

• • •

### கேள்விக்குறி ... தொடர்ச்சி ...

இந்தியாவின் இந்த திட்டத்திற்கு பல சிக்கல்களை தோற்றுவித்துள்ளது. தென்னாபிரிக்கா தொடுத்த வழக்கில் ஐ.நா நீதிமன்றம் கூறிய தீர்ப்பை தொடர்ந்து பல நாடுகள் இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை நிறுத்தி வருகின்றன.

இஸ்ரேலின் மிகப்பெரும் ஆயுத உற்பத்தி நிறுவனமான Elbit Systems என்ற நிறுவனத்து டனான தமது உடன்பாடுகளை இரண்டு யப்பானிய நிறுவனங்கள் முறித்துக்கொண்டுள்ளன. எப்-35 தாக்குதல் விமானங்களுக்கான உதிரிப் பாகங்களை இஸ்ரேலுக்கு ஏற்றுமதி செய்வதை நெதர்லாந்து நீதிமன்றம் தடை செய்துள்ளது.

ஆனால் இந்தியா தொடர்ந்து ஆயுதங்களை வழங்குவது இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு துணைபோவதையே காட்டுவதாக லிங்கானா என்ற பாதுகாப்பு ஆய்வாளர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் வெளிவிவகார அமைச்சு பாலஸ்தீ னம் மற்றும் இஸ்ரேல் தொடர்பான தனது வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றமில்லை என தெரிவித்தாலும் அவர்கள் இஸ்ரேல் பக்கம் சாய்ந்துள்ளது தெளிவாகி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலை கண்டித்த முதலாவது தெற்கு மண்டல நாடு இந்தியா என்பதுடன் ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட போர்நிறுத்த தீர்மானத்தையும் முதலில் இந்தியா புறக்கணித்திருந்தது.

மிகப்பெரும் செல்வந்தரான அதானி குழு மத்தின் பொருளாதார வலைக்குள் வீழ்ந்துள்ள இந்தியா தனது நாட்டின் இறைமையை மெல்ல மெல்ல இழந்து வருவதையே இது காட்டுகின்றது. 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இஸ்ரேலின் ஹைய்பா துறைமுகத்தை கொள்வனவு செய்த இந்த நிறுவனம், இஸ்ரேலின் ஆயுத உற்பத்தி நிறுவனத்துடனும் கூட்டுச் சேர்ந்துள்ளதுடன், அமெரிக்காவுடன் இணைந்து கொழும்பு துறை முகத்தின் கொள்கலன் கையாளும் பகுதியையும் கையகப்படுத்தியுள்ளது.

அதாவது உலகில் சக்திவாய்ந்த நாடாக தன்னை நிலைநிறுத்தும் தனது சொந்த நலன்களுக் கும் வர்த்தக நலன்களுக்கும் இடையிலான சமரில் இந்தியா சிக்கியுள்ளது. இந்தியாவின் இந்த நிலை என்பது மிகப்பெரும் ஆபத்தான எதிர்காலத்தை தான் இந்தியாவுக்கு உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. அதாவது தனியார் பிடியில் இருந்து இந்தியா வெளிவரமுடியாத நிலை ஒன்றை அது உருவாக்கும்.

• • •

## பாகிஸ்தானின் ... தொடர்ச்சி ...

சுமத்தப்பட்டிருந்தன. பாகிஸ்தானின் உச்ச நீதி மன்றம் இவ்வாறான குற்றச்சாட்டுகளை நீக்க முடிவுசெய்தது அவருக்கு சாதகமாக அமைந்தது. அதுவரை எல்லாமே வடிவமைக்கப்பட்ட திட்டத்துக்கு ஏற்ப நடைபெறுவதாகவே கருதப்பட்டது.

ஆனால் அவர்கள் போட்டிருந்த திட்டத்துக்கு வேறொரு பக்கமும் இருந்தது. கடந்த மே மாதம் இம்ரான் கானைக் கைதுசெய்ய முயன்றபோது, நாட்டில் ஏற்பட்ட கலகத்தைத் தொடர்ந்து, பாகிஸ்தானின் சிவில்-இராணுவ தலைமைத்துவம் இம்ரானின் கட்சிக்கு எதிராகத் தமது திட்டத்தை எவ்வித இடையூறுமின்றிச் செயற்படுத்தக்கூடியதாகவிருந்தது. முதலில் கலகக்காரரர்கள் 'பயங்கரவாதிகள்' எனப்பெயர் சூட்டப்பட்டனர். இது இம்ரானின் கட்சியின் நன்மதிப்பைப் பாதித்த காரணத்தினால், அந்தக் கட்சியுடன் தமது அரசியல் வாழ்க்கையைத் தொடர்வதா என்ற கேள்வி அக்கட்சி சார்ந்த பல அரசியல்வாதிகளுக்கு எழுந்தது.

முன்னர் நடைபெற்ற கலகம் தொடர்பாகச் சாட்சி சொல்ல இராணுவ நீதிமன்றத்திற்கு வருமாறு தாம் கட்டளையிடப்படலாம் எனக் கருதிய அரசியல் தலைவர்கள் பலர், அந்தக் கட்சியை விட்டு விலகி, புதிய அரசியல் இயக்கங்களை ஆரம்பிக்கத் தொடங்கினார்கள். இவ்வாறான இயக்கங்கள் அனைத்துமே இம்ரான் கானின் கட்சியின் பொதுவான கொள்கைகளையே பிரதிபலித்தது மட்டுமன்றி, அதிகாரத்தை வெளிப்படையாக எதிர்க்கவும் தொடங்கினார்கள். இறுதிவரை இம்ரான் கானுக்குப் பிரமாணிக்கமாக இருந்த அவரது கட்சி அதிகாரிகள் தாக்குதல்களுக்கு உள்ளானது மட்டுமன்றி, கைதுகளுக்கும் தேடுதல்களுக்கும் வேறு பிரச்சினைகளுக்கும் உள்ளாக்கப்பட்டார்கள். இம்ரான் கான் மேல் பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு, அவ்வழக்குகளுக்காக அவருக்கு 30 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வாறான ஒரு புறச்சூழலில், ஆச்சரியப்படத்தக்க விளைவுகளை தேர்தல் கொண்டுவரும் என்று எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை. மக்கள் ஒரு குறிப்பிட்ட தலைவரை விரும்புவதான ஒரு தோற்றம் உருவானது. அவருக்கு எதிரான கட்சி தோல்விக்குள்ளாக்கப்பட்டது. பிறிஜ கட்சியின் ஆதரவிலிருந்த சுயேச்சைவேட்பாளர்களால் கட்சிச் சின்னங்களை எந்த வகையிலும் பயன்படுத்த முடியவில்லை. இதன் காரணமாக வாக்குச்சீட்டில் அவர்களைஇலகுவாக இனங்காண முடியவில்லை.

தேர்தல் நடைபெற்ற நாளில் பல பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன. பல்வேறுகட்சிகளின்ஆதரவாளர்களுக்குஇடையே மோதல்கள் ஏற்பட்டன. வாக்களிப்பில் பல மோசடிகள் நடைபெற்றதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. மாலை நேரம் வந்த போது எல்லாம் ஒரு முடிவுக்கு வந்து, தேர்தல் முடிவுகளை அறிவதற்காக நாடு நள்ளிரவு வரை காத்திருந்தது. உரிய நேரம் அண்மித்த போதிலும் முடிவுகள் எதுவுமே வெளிவரவில்லை. இவ்வாறான ஒரு சூழலில் இம்ரான் கானின் ஆதரவாளர்களோ, சுயேச்சை வேட்பாளர்களில் 264 ஆசனங்களில் 134, 150, ஏன் 170 ஆசனங்களை வென்றிருப்பதாக உத்தியோகப்பற்றற்ற செய்திகளை வெளியிடத் தொடங்கியிருந்தார்கள்.

தேர்தல் ஆணையத்தின் உத்தியோகபூர்வ முடிவுகள் அடுத்த நாள் விடியற்காலையிலே தான் வெளிவரத் தொடங்கின. பதிவுசெய்யப்பட்டிருந்த எல்லாக் கட்சிகளையும் தாண்டி, இம்ரான் கானின் ஆதரவாளர்கள் பலர் வெற்றிபெற்றிருந்தார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று இல்லாவிட்டாலும், அவர்களது எதிரிகளை விட அவர்கள் அதிகமாகவே வெற்றிபெற்றிருந்தார்கள். பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சியும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும், முறையே 70க்கும் 50 க்கும் மேற்பட்ட ஆசனங்களை மட்டுமே பெற்றிருக்க, சுயேச்சை வேட்பாளர்கள் 90க்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெற்றிருந்தனர்.

புதிய அரசை யார் அமைக்கப் போகின்றார்கள் என்பது இன்னும் முடிவாகவில்லை. ஆனால் பெரிய கட்சிகளான பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சி, பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆகியவை ஒரு கூட்டணி அரசை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையை பாகிஸ்தான் முஸ்லீம் கட்சி கிஞ்சித்தும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஒரு அரசை அமைப்பதில் நவாஸ் ஷரீவ் எப்படியும் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு நடைபெற்ற பின்னர் தேர்தல் முடிவுகள் அவருக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கப்போவதில்லை.

உருவாகக்கூடிய முதலாவது பிரச்சினை அரசியில் ரீதியானதாக இருக்கும். தற்போதைய, அதாவது 2024 பெப்பிரவரியில் இருக்கும் சூழ்நிலைப்படி நிலைமை வெளிப்படையாகத் தெரிகிறது. அதிகார அமைப்புக்கு மிகவும் விருப்பமான ஒருவர் இருக்கிறார் என்பதும் அவர்களுக்கு ஒரு பரம வைரி இருக்கிறார் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இருப்பினும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் நிலைமை இதற்கு முற்றிலும் எதிரானதாக இருந்தது. முக்கிய விடயங்கள் அனைத்திலும் இராணுவத்துடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பதாக அப்போது இம்ரான் கான் தெரிவித்திருந்தார். அதே நேரம் எதிர்த்தரப்புக்கு எதிராக வழக்குத் தொடுப்பது தொடர்பாக இராணுவம் அலட்டிக்கொள்ளவில்லை. இராணுவம் அரசியலுக்கு வெளியே நிற்கும் என்று அப்போது சொல்லப்பட்டது. ஆனால் இவை எல்லாம் திடீரென தலைகீழாக மாறலாம் என்பது யதார்த்தம் ஆகும்.

நவாஸ் ஷெரீவைப் பொறுத்தவரையில் அதிகார அமைப்போடு அவருக்கு இருந்த உறவு மிகவும் சிக்கலானது. மூன்று தடவைகள் அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. 1993ம் ஆண்டில் அதிபர் கூலாம் ஈஷாக் கான் அதற்குக் காரணமாக இருந்தார். 1999 இல் ஜெனரல் பர்வேஷ் முஷாரவ்வினால் ஆட்சிக்கவிழ்ப்பு மேற்கொள்ளப்பட்டது. 2017 இல் ஊழல் குற்றச்சாட்டுகளைக் காரணங்காட்டி, மீண்டும் அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதிகாரவெறி பிடித்தவர் என்றும் தலைக்கனம் கொண்டவர் என்றும் கருதப்படும் நவாஸ் ஷெரீவ் உயர் மட்டத்தில் இருக்கின்ற இராணுவ ஜெனரல்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகளின் காரணமாகத் தனது பிரதம மந்திரி பதவியை இழந்தார். தன்னைப் பாதுகாப்பவர்களை மீண்டும் ஷெரீவ் ஏமாற்றமாட்டார் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் இலகுவில் தீர்க்கமுடியாத பல சிக்கலான பிரச்சினைகள் அவருக்காகக் காத்திருக்கின்றன.

**தொடரும்.**

***நன்றி: https://www.rt.com/news***

## ஜே.வி.பி.யை ... தொடர்ச்சி ...

கட்டுப்படுத்துவதற்கும் ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அமெரிக்காவின் தலைமையிலான மேற்கு நாடுகள், மனித உரிமைகள், சர்வதேச குற்றவியல் சார்ந்த விடயங்களை கருவிகளாகப் பயன்படுத்தினார்கள்.

இதற்கு உதாரணமாக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை நாம் எடுத்துக்கொள்ளலாம். அதில் விமர்சனக்கண்ணோட்டம் ஒன்று இருந்தாலும் கூட, ஏதோ ஒரு வகையில் தங்கள் நலன்கள், அல்லது தாம் விரும்புகின்ற தரப்புக்களை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு தமிழர்களுக்குத் தேவைப்படுகின்ற பொறுப்புக் கூறல் விடயத்தை ஏதோ ஒரு வகையில் அவர்கள் பயன்படுத்தினார்கள்.

சந்தர்ப்பங்கள் கிடைத்தபோது, தவறு பெரும்பாலும் தமிழர் தரப்பிடம்தான் இருந்தது என்பதுதான் எமது பிரதான குற்றச்சாட்டு. பொறுப்புக் கூறல் விடயத்தை பயன்படுத்தி இலங்கையில் இருக்கக்கூடிய அரசியலை தமது நலன்களுக்கு இந்தத் தரப்புக்கள் பயன்படுத்த முற்பட, நாங்கள் எங்களுடைய நலன்கள் சார்ந்த விடயங்களில் இறுக்கமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், கடந்த பதினைந்து வருடங்களாக நாங்கள் கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவ விட்டிருக்கிறோம்.

இன்று மேற்கு நாடுகள் விரும்புகின்ற ஆட்சியாளராக ரணில் விக்கிரமசிங்க இருக்கின்ற நிலையில், தமக்கு விருப்பமான ஆட்சியாளர்களைப் பதவிக்குக் கொண்டுவருவது என்பதைத் தாண்டி, சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவது என்ற ஒரு கொள்கையுடன்தான் அவர்கள் செயற்படுகின்றார்கள்.

பொருளாதார நெருக்கடியால் இலங்கை மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை அரசை இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து அவர்கள் காப்பாற்றாவிட்டால், இலங்கை அரசு ஒரு தோல்வியடைந்த அரசாகப் போய்விடும், அவ்வாறான ஒரு நிலைமையில் மக்கள் மத்தியில் ஒரு தீவிரப் போக்கும், குழப்பங்களும் ஏற்பட்டு புரட்சிகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டு வந்தால், அது ஒரு மாக்ஸிஸ, மேற்கத்தைய போக்குக்கு எதிராகச் செயற்படக்கூடிய தரப்புக்களுக்குத்தான் லாபமாகப் போய்விடும், அந்தத் தரப்புக்கள் ஒரு போதும் மேற்குடன் பயணிக்காது, சீனா போன்ற மேற்குக்கு எதிராகவுள்ள தரப்புக்களுடன்தான் பயணிக்கும் என்ற ஒரு கணிப்பும் இருக்கின்றது.

இந்த நிலையில், பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாகவுள்ள இன நெருக்கடிக்குத் தீர்வைக் காணாமல், வெறுமனே ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதன் மூலம், எதிர்காலத்தில் தமக்கு வரக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்க்கலாம் என சிந்தித்துச் செயற்படும் ஒரு நிலைமைதான் காணப்படுகின்றது.

இது அடிப்படையில் ஈழத் தமிழர்களுக்கும் கடும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற விடயம். நல்லாட்சியையும், ஜனநாயகத்தையும், சட்டத்தின் ஆட்சியையும் விரும்புகின்ற தெற்கில் உள்ள தரப்புகளையும் இந்தப் போக்கு பலவீனப்படுத்தும்.

இந்த விடயங்களை நாம் அவர்களுக்கு எடுத்துக்காட்டி இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டால், இலங்கையின் ஜனநாயகப் பண்புகள் முற்றுமுழுதாக இழக்க வேண்டிய நிலை வரும் என்ற விடயத்தையும் சொன்னோம். அத்துடன் இறுதியில் இந்த மேற்கத்தைய நாடுகளின் நலன்களும் நீண்ட காலத்தில் பாதிக்கப்படலாம் என்பதையும் அவர்களுக்கு எடுத்துக் கூறினோம்.

இதில் ஈழத் தமிழர்களுக்குக் கிடைத்த மிகச் சிறந்த சந்தர்ப்பம் இந்த பொருளாதார தடை. ஆயுதப் போராட்டம் காலத்தில் கூட, பொருளாதார ரீதியாக இலங்கை பாதிப்படைந்தால், பேரம்பேசக் கூடியதாக இருக்கும் என்பதால் பொருளாதார ரீதியாக இலங்குகளையும் வைத்திருந்தார்கள். ஆனால், இந்தப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் கூட ஏற்படுத்தப்படாத பொருளாதார வீழ்ச்சி இப்போது 15 வருடங்களின் பின்னர் ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறு அடிமட்டத்துக்கு அரசாங்கம் வீழ்ச்சியடைந்திருக்கும் நிலையில், அரசாங்கத்தில் உள்ள தவறுகள் நிவர்த்தி செய்யப்பட்டால் மட்டும்தான் எதிர்காலத்திலும் இவ்வறான தவறுகள் நடைபெறாமல் இருக்கும். இப்போது உதவி வழங்கும் தரப்புக்களும் அதில் கவனம் செலுத்த வேண்டும்.

• • •

## எட்கா ... தொடர்ச்சி ...

மருத்துவர்களுக்கான பற்றாக்குறை இருக்கின்றது. இந்தியாவில் அவ்வாறில்லை. பற்றாக்குறை உள்ள இடத்தை நோக்கித்தான் அவர்கள் வருவார்கள். ஆக, இதன்மூலமாக அதிகளவு நலன்கள் இந்தியாவுக்குத்தான் கிடைக்கும்.

### ரணிலின் உபாயம் என்ன?

ஐ.தே.க. எப்போதுமே திறந்த பொருளாதாரத்துக்கு ஆதரவாகவே இருந்துள்ளது. ஏற்றுமதி மேம்பாட்டையும், தனியார் மயமாக்கலையும் தமது கொள்கையாகக் கொண்டவர்தான் ரணில் விக்கிரமசிங்க. அந்தவகையில் பொருளாதாரத்தை திறந்துவிடுவது, அதற்கான உடன்படிக்கைகளைச் செய்வது என்பதெல்லாம் அவரது சிந்தனைக்கு முரணானவையல்ல. எட்கா உடக்படிக்கையையும் அவர் அவ்வாறுதான் பார்க்கிறார்.

இரண்டாவதாக, அவர் மிகத் தந்திரமாக சீனாவையும் இந்தியாவையும் கையாள்கின்றார். அவர் இந்தியாவுக்குக் கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை சீனாவுக்கும் கொடுப்பார். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்தைய 1983 – 89 காலப்பகுதி மீண்டும் வந்துவிடக்கூடாது என்பதில் அவர் உறுதியாகவுள்ளார். அதனால்தான், சீனாவுக்குக் கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை இந்தியாவுக்கும் கொடுக்கிறார். அதன் பிரதிபலிப்புத்தான் இந்த உடன்படிக்கை குறித்த அவரது நிலைப்பாடு.

ஜனாதிபதித் தேர்தலில் இந்தியா தனக்கு எதிராகச் செயற்படலாம் எனக் கணிப்பிடும் ரணில் டில்லியை சாந்தப்படுத்த முற்படுகின்றார். அதற்கான ஒரு தந்திரோபாயமாகத்தான் எட்கா உடன்படிக்கையை அவர் ஏற்றுக்கொள்கின்றார். இந்தியாவைப் பொறுத்தவரையிலும், அதற்கு சாதகமான ஒரு காலநிலை இப்போது இருப்பதாகவே பார்க்கின்றது!

• • •

## தேசிய மாநாட்டு ... தொடர்ச்சி ...

உட்பட நிர்வாகக் குழுவுக்கான பெயர்கள் மத்திய குழுவில் தெரிவு செய்யப்பட்டு அது பொதுக் குழுவுக்குப் பாரப்படுத்தப்பட்டது. பொதுக் குழுவில் இதன்போது குழப்பம் ஏற்பட்டது. இதன் காரணமாக கட்சியின் தேசிய மாநாடும் ஒத்திவைக்கப்பட்டது. குறிப்பாக பொதுச்செயலாளர் பதவி தொடர்பில் குழப்பம் நீடித்தது. பொதுச் செயளாளராகத் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் சண்முகம் குகதாசனின் பெயர் பிரேரிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசனுடைய பெயரும் அந்தப் பதவிக்குப் பிரேரிக்கப்பட்டிருந்தது. இதனால் குழப்பம் நீடித்தது. இது தொடர்பில் ஆராயும் கூட்டம் வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர் சி.சிறீதரனும் பங்கேற்றிருந்தார். இழுபறி நிலையிலிருந்த பொதுச்செயலாளர் பதவியை குகதாசன் மற்றும் ஸ்ரீநேசன் இருவருக்கும் சுழற்சி முறையில் வழங்க முடிவு செய்யப்பட்டிருந்தது.

அதில் முதலாவது வருடம் யார் பொதுச் செயலாளர் பதவியை வகிப்பது என்பதிலேயே இழுபறி நிலை நீடித்த நிலையில் அதற்கு தற்போது இணக்கம் காணப்பட்டது. முதலாவது வருடம் குகதாசனுக்கும், அடுத்த வருடம் ஸ்ரீநேசனுக்கும் வழங்க தற்போது இணக்கம் காணப்பட்டது.

இதனிடையே, உட்கட்சி ஜனநாயகத்தைச் சிதைக்கும் வகையில் நடைபெறும் சூழ்ச்சிகளை முறியடித்து உடனடியாக மாநாட்டை நடாத்துமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகிய இருவரும் இணைந்து கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் இரா.சம்பந்தனை சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பூகோள அரசி ... தொடர்ச்சி ...

தெரிவாக என்ன இருக்கும் என்பது தான் கேள்வி. அதாவது மறுதரப்பு தனது வெற்றிடத்தை எவ்வாறு ஈடுசெய்யும்?

இந்த நிலையில் தான் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உட்பூசலும் இந்த பூகோள அரசியலின் வெளிப்பாடா என்ற கேள்விகளும் எழாமலில்லை.

## இஸ்ரேலுக்கு ... தொடர்ச்சி ...

ரபா பகுதி மீது தாக்குதல் நடத்தப்போவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ள நிலையில் இந்தியா 20 விமானங்களை வழங்கியுள்ளது. ரபா பகுதி மீதான தாக்குதல் மிகப்பெரும் மனிதப் பேரவலத்திற்கு வழிவகுக்கும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருந்தது.

இஸ்ரேல் மேற்கொண்டுவரும் படை நடவடிக்கைகளில் இந்த விமானங்கள் மிகப் பெரும் பங்கை வகிக்கின்றன. அது உளவு நடவடிக்கைகளுக்கும், குண்டுவீச்சு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுவதுண்டு.

2014 ஆம் ஆண்டு பாலஸ்தீனம் மீதான தாக்குதலுக்கு இஸ்ரேல் இந்த விமானத்தை முதலில் பயன்படுத்தியிருந்தது. அந்தப் போரில் 2000 பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டதுடன், 10,000 மக்கள் காயமடைந்திருந்தனர் என படைத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்தள்ளனர்.

இந்தியாவின் இந்த நடவடிக்கை முஸ்லீம் நாடுகளிடமும், மக்களிடமும் பெரும் கவலைகளை தோற்றுவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஐரோப்பிய ஒன்... தொடர்ச்சி ...

உள்ள ஒரு நிறுவனம் மீது தடைகளை கொண்டுவருவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.

சீனாவின் நிறுவனங்கள் மீது தடைகளை கொண்டுவருவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் முன்னரும் ஆலோசித்தபோதும், சீனா மீதான தடை தமது நாட்டின் பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும் என பல ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்புக்களை தெரிவித்ததால் கைவிடப்பட்டிருந்தது.

தற்போது மீண்டும் தடைகளை கொண்டுவருவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசித்துவருகின்றது. தடைகள் போடப்பட்டால் உக்ரைன்- ரஸ்ய போருக்கு பின்னர் சீனா மீது கொண்டுவரப்பட்ட முதலாவது தடை இதுவாகும்.

அதேசமயம், இந்தியா, கொங்கொங், சேர்பியா மற்றும் துருக்கிய ஆகிய நாடுகள் மீதும் தடைகளை கொண்டுவருவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசித்து வருகின்றது.

## சமூக பிணக்கு ... தொடர்ச்சி ...

காண சிறந்ததொரு பயிற்சியாக இவ் இரு நாட்கள் கொண்ட பயிற்சி பெரும் பங்களிப்புச் செய்யும் என எதிர் பார்க்கப்படுகிறது.

வன்முறைகள் மூலம் ஏற்படும் விளைவுகளை குறைக்க தீர்வுகளை பெறவும் அதற்கான திறன்கள் நுட்பங்களை கையாண்டு சமூக மட்ட அமைப்புக்களை வலுப்படுத்தவும் இப் பிணக்கு தொடர்பான பயிற்சிப் பட்டறை மேலும் சிறப்பாக அமையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த பயிற்சி பட்டறைக்கு வளவாளராக எம்.ஜெ.எம்.இர்பான் கலந்து கொண்டு பல வழிகாட்டல்களுடன் திறம்பட விரிவுரைகளை குழு செயற்பாடு மூலமாக வழங்கியிருந்தார்.

இதில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய திருகோணமலை மாவட்ட கள இணைப்பாளர்கள்,தம்பலகாமம் மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## மீண்டும் கனடா ... தொடர்ச்சி ...

குற்றம் சுமத்திய அமெரிக்கா கடந்த வருடம் அதனுடன் தொடர்புடைய நபரையும் கைது செய்திருந்தது.

இந்த நிலையில் பன்னுமுக்கு நெருக்கிய நண்பரான இந்திரஜித்சிங் கோசல் என்பவரின் வீட்டு ஜன்னலில் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த அடையாளங்களை வீட்டு திருத்த வேலைகளுக்காக வந்தவர்கள் கண்டறிந்து காவல்துறையினருக்கு அறிவித்துள்ளனர்.

வீட்டில் திருத்தவேலைகள் இடம்பெறுவதால் தாக்குதல் நடந்த சமயம் அங்கு யாரும் இருக்கவில்லை எனவும், இது உயிர் அச்சுறுத்தலுக்கான எச்சரிக்கையா என தாம் விசாரித்துவருவதாகவும் கனேடிய காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

சிம்ரஞ்சித் சிங் என்ற பன்னுமின் மற்றுமொரு நண்பர் மீது கனடாவில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சில தினங்களில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தாக்குதல் தொடர்பில் இரு கனேடிய இளைஞர்களை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

ரொறொன்டோவில் உள்ள இந்திய தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை கடந்த வாரஇறுதியில் கோசல் ஏற்பாடு செய்திருந்த நிலையில் அவரின் வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் தமக்கும் இந்த தாக்குதல்களுக்கும் தொடர்பு இல்லை என இந்தியா தெரிவித்துவருகின்றது.

## மருத்துவத்துறை ... தொடர்ச்சி ...

கான சிகிச்சைமுறை, மேலதிக பரிசோதனைகள், மருந்துகள் தொடர்பில் அது தெளிவான விளக்கங்களை கொடுத்துள்ளது.

ரஸ்யாவில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவக் குறிப்புக்கள், பாடப்புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்ற தகவல்களை கடந்த 6 மாதமாக செயற்கை நுண்ணறிவுக்கு 42 கிகாபைற் ஞாபகசக்தியுள்ள கணினியில் பதிவேற்றி வடிவமைத்ததாக அதனை வடிவமைத்த கணினிப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த தொழில்நுட்பம் பொது மக்களின் பாவனைக்கு வருவதற்கு சில காலம் எடுக்கும் என ரஸ்ய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.